Registered as a News paper in Ceylon

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன் 389

National Tamil Daily    தேசிய தினசரி

மலர் 4    யாழ்ப்பாணம்    சுபகிருது    தை 19 ஆம் நாள்    றம்ழான் ... 5    (1-2-63)    வெள்ளிக்கிழமை    தபாற் பெட்டி என் 49    351

யாழ்ப்பாண மக்களுக்கோர் நற்செய்தி!
புதிதாகத் திறக்கப்பட்ட ஸ்தாபனம்




அல்பேட் ஏதிரிசிங்க
பிரசித்தமான கண்பரிசோதகரும்
மூக்குக்கண்ணடி விற்பனையாளரும்
45, மெயின்வீதி, : யாழ்ப்பாணம்

# "எதிரிகள் அடித்ததும் நாகநாதன் விழுந்தார்"

## பொலிஸ்மீது தொடரப்பட்ட வழக்கில் சாட்சியம்

## தீர்ப்பு இன்று வெளியாகும்

யாழ்ப்பாணம், வெள்ளி

"எதிரிகள் இருவரும் என் பின்புறமாகவந்து எனது தலையில் அடித்தார்கள். ஒரே இடத்தில் இருவரும் அடித்ததும் நான் கீழேவிழுந்தேன்" என்று நல்லூர் எம். பி. டாக்டர் இ. எம். வி. நாகநாதன், யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் வைத்துத் தம்மைத் தாக்கியதாக உதவிப் பொலிஸ இன்ஸ்பெக்டர் திரு. பெரேரா, திரு. பிலப்பிட்டியா ஆகியோர்மீது குற்றஞ்சாட்டி தாம்தொடர்ந்த வழக்கில் நேற்று சாட்சியமளிக்கையில் கூறினர். டாக்டர் நாகநாதனை முதலெதிரியின் சார்பில் ஆஜரான சிரேஷ்ட வழக்கறிஞர் திரு. ஏட்லிபெரேரா குறுக்குவிசாரணை செய்தார்.

நேற்றைய விசாரணையில் சாட்சியமளித்த பத்மநாதன் என்ற சாட்சியும் "எதிரிகள் இருவரும் தலையில் அடித்ததும் டாக்டர் நாகநாதன் கீழேவிழுந்தார்" என்று குறுக்கு விசாரணையின்போது தெரிவித்தார்.

இந்தவழக்கு நேற்று யாழ்ப்பாணம் மாவட்ட நீதிபதி திரு. கிரட்ஸர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. முதல் எதிரியின் சார்பில் வழக்கறிஞர் ஏட்லி பெரேராவும் இரண்டாவது எதிரியின் சார்பில் வழக்கறிஞர் டி. கணேசலிங்கமும் திரு. நடராசாவின் அனுசரணையுடன் ஆஜரானார்கள். டாக்டர் நாகநாதன் சார்பில் ஆனரபிள் ஏ. வி. எம். அமீர் திரு. கே. வி. எஸ். சண்முகநாதனின் உதயுடன் திருவாளர்கள் ஏ. சொக்கலிங்கம், எஸ். நடராசா ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜரானார்கள்.

குறுக்கு விசாரணையின் போது தொடர்ந்து டாக்டர் நாகநாதன் கூறியதாவது:-

"எங்கள் கட்சி கடைகளை பூட்டும்படி வேண்டுகோள் விடுத்தது. நானும் கடைகளை பூட்டும்படி கேட்டுக்கொண்டேன். எனக்கு கதிரவேலுவை இச்சம்பவம் நடைபெறுவதற்கு முன் தெரியாது. கதிரவேலு காயம்பட்டிருப்பதாக பத்மநாதன் மூலம் அறிந்தேன். கடைகளை பூட்டுவிக்கும் படி நான் யாருக்கும் கட்டளையிடவில்லை. பதமநாதனும் என்னுடன் ஆஸ்பத்திரிக்கு வந்தார். 'ஜீப்'பில் இருந்த கதிரவேலுவுடன் சில வார்த்தைகள் பேசினேன். அவர் குடிவகை பாவித்ததாக எனக்குத் தெரியவில்லை. கதிர்வேலுவை பிணையில் விடுதலை செய்வதற்காக பொலிஸ் நிலை

(5ம் பக்கம் பார்க்க)

சதி வழக்கு

## எதிரிகள் பிணையில் அனுமதிக்கப்படுவார்களா?

## தீர்ப்பு ஐந்தாம் திகதி!

கொழும்பு, வியாழன்

சட்ட ரீதியாக அமைந்த ஒரு அரசாங்கத்தை சட்டவிரோதமான முறையில் கடந்த வருடம் ஜனவரி மாதம் கவிழ்க்கச் சதி செய்ததாக தொடரப்பட்ட வழக்கில் சம்பந்தப்பட்ட 24 எதிரிகள், தங்களைப் பிணையில் விடுதலை செய்யவேண்டுமென்று கோரிய மனுக்களுக்கு 5-ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை தீர்ப்பளிக்கப்படும்.

தோல்வியுற்ற புரட்சி சதி வழக்கு, மூன்ருவது முறையாக நியமிக்கப்பட்ட நீதி மன்றத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட சமயம், எதிரிகளின் சார்பில் ஆஜரான வழக்கறிஞர்கள், சந்தேக நபர்களை பிணையில் விடுதலை செய்ய வேண்டுமென்று கடந்த செவ்வாய்க்கிழமை முதல் இன்று வரை வாதாடினர்.

சதி வழக்கில் சம்பந்தப்பட்ட 24 சந்தேக நபர்களும் பிணையில் விடுதலை செய்யப்படுவார்களா இல்லையா என்பது செவ்வாய்க்கிழமை 5-ம் திகதி அறிவிக்கப்படும். சதி வழக்கு விசாரணை 5-ம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

## இலங்கையில் டின் மீன்கள் தயாரிப்பு

### மேற்கு ஜேர்மன் நிபுணர்கள் யோசனை

கொழும்பு, வியாழன்

இலங்கையில் இப்பொழுது தங்கியிருக்கும் மேற்கு ஜெர்மன் மீன்பிடி நிபுணர்கள், காலியில் முதல் தரமான மீன்பிடி நிலையமொன்றை அமைக்கலாமென்றும் திருக்கோணமலை, முகத்துவாரம் பகுதிகளில் ஆழ்கடலில் அதிக மீன்களைப் பிடிக்கலாமென்றும் அரசாங்கத்திற்கு யோசனை கூறியுள்ளார்கள்.

இலங்கையில் மீன் பிடித் தொழிலை அபிவிருத்தி செய்யும் பொருட்டு, இலங்கை அரசாங்கதின் அழைப்பின் பேரில் மேற்கு ஜெர்மன் அரசாங்கம் இந்த இரு மீன்பிடி நிபுணர்களையும் இங்கு அனுப்பியது. இந்த உதவி, வெளிநாட்டு உதவித் திட்டத்தின்கீழ் இலங்கை அரசாங்கத்திற்குகிடைத்தது இலங்கையில் பிடிக்கப்பட்ட மீன்களை டின்களில் அடைத்து உள்ளூரிலே விற்பனை செய்வதற்கு வாய்ப்புகள் உண்டென்றும், வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் மீன்களை கட்டுப்படுத்தலாமென்றும் இந்தநிபுணர்கள் யோசனை தெரிவித்துள்ளனர்.

நாளை மாலை பொன் நகருக்குப் புறப்பட்டுச் செல்லும் இவ்விரு நிபுணர்களும் இது பற்றி அதிக விரைவில் அறிக்கை சமர் பிப்பார்கள்.

## 19 பேர் மாண்டனர்

பாரிஸ், ஜன. 31

வடக்கு அங்கோலாவிலுள்ள கபிண்டா என்னுமிடத்தில் அண்மையில் ஆயுதம் தரித்த அங்கோலா தேசிய வாதிகளுக்கும் போர்த்துக்கீய துருப்புக்களுக்குமிடையே நடைபெற்றதொரு சண்டையில் 19 போத்துக்கீய துருப்புக்கள் கொல்லப்பட்டனரென்று இன்று பாரிஸில் வெளியான செய்தியொன்று கூறுகிறது.

## மயில்

புதுடில்லி, ஜன. 31

தேசிய பறவைச் சின்னமாக மயில் பறவையை, பாரத அரசாங்கம் தேர்ந்தெடுத்துள்ளது. பத்திரிகைகளும், ராஜிய அரசாங்கங்களும் தெரிவித்திருந்த கருத்துக்களைத் தொடர்ந்து, மயில் பறவையைத் தனது தேசிய பறவையாக பாரத அரசாங்கம் தேர்ந்தெடுத்தது.

## ஜனநாயகம் சமதர்மம் என்று பேசுகிறீர்கள்!

### தமிழ்பேசும் மக்கள் நிலை என்ன?

### பிரதமருக்கு திருமலை எம். பி. கடிதம்

திருக்கோணமலை, வியாழன்

ஒரே ஒரு தினம் அதுவும் மக்களின் பலத்த எதிர்ப்புக்களுக்கு மத்தியில் தங்கியிருந்த அமைச்சர் பரந்து வாழும் யாழ்ப்பாணமக்களின் பல்வேறு பிரச்னைகளைக் கேட்டறிந்ததாகக் கூறுவது விந்தையாயிருக்கிறது" என்பதாக திருக்கோணமலைப் பிரதிநிதி திரு என். ஆர். இராசவரோதயம் பிரதம மந்திரி ஸ்ரீமதி சிறிமாவோ பண்டாரநாயகாவுக்கு எழுதிய கடிதமொன்றில் குறிப்பிட்டிருக்கிறார்.

திரு. இராசவரோதயம் தமது கடிதத்தில் மேலும் கூறியிருப்பதாது:-

தங்கள் மந்திரி சபை உறுப்பினர்களில் ஒருவரான உணவு, வர்த்தக அமைச்சர் திரு டி. பி. இலங்கரத்தின அண்மையில் தமது கட்டுப்பாட்டின் கீழுள்ள சகல கூட்டுறவு தாபன அதிகாரிகளுக்கும் விடுத்துள்ள ஓர் எச்சரிக்கை அறிவித்தலில் தமிழரசுக்கட்சிப் பிரதிநிதிகளின் பேச்சுக்கு செவிசாய்க்க வேண்டாம் என்றும் இவர்கள் தாழ்த்தப்பட்ட சமூகத்தினரின் குறைகளைத்திரித்துக் கூறுவதாகவும் தமது யாழ்ப்பாண விஜயத்தின் போது பல்வேறு கூட்டுறவு ஸ்தாபனங்களின் பிரதிநிதிகள் தம்மைச் சந்தித்து குறை

(8-ம் பக்கம் பார்க்க)

## கடற்றொழிற் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 212) பிரிவு 20 (3) இன் கீழ் அறிவித்தல்

என் 207-கடற்றொழிற் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 212) பிரிவு 20 (3) இன் நியதிகளின் படி, கௌரவ சி. பி. டி' சில்வா, விவசாயம், காணி, நீர்ப்பாசனம், மின்விசை அமைச்சரவர்கள் (1) திருகோணமலைக் கலைக் கயிற்று மீன்பிடியாளர்களுக்கும் (2) திருகோணமலைக் கரைவலை மீன்பிடியாளர்களுக்கும் (3) பருவகாலங்களிலே திருகோணமலைக்கு வந்து கயிற்றல் மீன்பிடிக்கும் புலம்பெயர்ந்து வரும் மீன்பிடியாளர்களுக்கும் (4) அடசு வலையை உபயோகிக்கும் உள்ளூர் மீன்பிடிகாரர்களுக்குமிடையில், பொதுவாக சல்லித்துறை என வழங்கும். திருகோணமலை டாக்வே பிறட்றிக் கோட்டையை அடுத்துள்ள இலங்கை நீரகத்தில் அவரவர்களுக்குரிய மீன்பிடி உரிமையை யிட்டு எழுந்துள்ள தகராற்றைச் சாட்டியுள்ளனர்.

**2. தகராற்றையிட்ட விடயம் பின்வருமாறு:-**

(அ) கலைக்கயிற்று மீன்பிடியாளர்கள் தாங்கள் திருகோணமலையின் நிரந்தர வாசிகளென்றும் வடகீழ் பருவப் பெயர்ச்சிக் காற்றுக் காலத்தில் ஆழிக் கடல் மீன்டிக்குச் செல்ல முடியாதென்றும் வாதாடுகின்றனர். மீன்பிடியற்ற காலத்தில் சல்லிப்போட்டில் கரைவலை மீன்பிடியாளர்கள் மீன்பிடித்தலை ஆட்சேபித்து கலைக்கயிற்று மீன்பிடியைத் தவிர்ந்த மீன்பிடியை அனுமதிக்காதுசெய்ய வேண்டுமென்கின்றனர் 1941 ம் ஆண்டு செப்டம்பர்மாதம் 26 ம் திகதியில் 8,796 ம் இலக்க அரசாங்க வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்கு விதிகளின் அட்டவணையில் விபரிக்கப்பட்ட பிராந்தியங்கள் எ இலும் பீ இலும் புலம் பெயர்ந்து செல்லும் மீன்பிடியாளர்கள் மீன்பிடித்தலை அவர்கள் மேலும ஆட்சேபிக்கின்றனர். அவர்கள் 26—9—41 ம் திகதியின 8,796 ம் இலக்க அரசாங்க வர்த்தமானியிற் பிரசுரித்த ஒழுங்குவிதிகளுக்குப் பொருத்தமான பீ பிராந்தியத்தில் மீன்பிடிக்கும் உரிமையையும் கோருகின்றனர்.

(ஆ) புலம்பெயர்ந்து செல்லும் மீன்பிடியாளர்கள் ஆதிநாள் தொட்டு இப்பிராந்தியத்திற்குப் புலம்பெயர்ந்து வருகின்றனரென்றும், இந்நீரகத்தில் மீன்பிடிக்க அவர்கள் அனுமதிக்கப்படவேண்டுமென்றும் வாதாடுகின்றனர்.

(இ) 26—9—41 ம் திகதியின் 8,796 ம் இலக்க அரசாங்க வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின் அட்டவணையில் விபரிக்கப்பட்ட பீ பிராந்தியத்தைக் கலைக்கயிற்று மீன்பிடியாளர்களின் படகுகள் சேர்த்து எல்லையிட்டுக்கொள்வதால் தங்கள் மீன்பிடி எதிரிடையாய்ப் பாதிக்கப்படுகின்றதென உள்ளூர்க் கரைவலை மீன்பிடியாளர் கூறுகின்றனர்.

(ஈ) அக்டோபர் 1 ம் திகதி முதல் மார்ச்சு 31 ம் திகதி வரை 26—9—41 ம் திகதியின் 8,796 ம் இலக்க அரசாங்க வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகளில் விபரிக்கப்பட்ட பீ பிராந்தியத்தை கலைக்கயிற்று மீன்பிடியாளர்களின் படகுகள் சேர்த்து எல்லையிட்டுக் கொள்வதையும் கரைவலை போடுவதையும் அடசுவலை மீன்பிடியாளர்கள் ஆட்சேபிக்கின்றனர்.

3. இந்தத் தகராற்றையிட்டு மட்டுமல்லாது இந்தத் தகராற்றைச் சார்ந்த அல்லது தொடர்புபட்ட அல்லது இதிலிருந்து எழுகின்ற அத்தகைய எல்லா விடயங்களையுமிட்டு ஒரு பகிரங்க விசாரணையை நடாத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு யான் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கின்றேன்.

4. இத்தகராற்றோடு சம்பந்தப்பட்ட அல்லது அக்கறை கொண்ட எல்லோரையும் இத்தகராற்றோடு சம்பந்தப்பட்ட எழுத்துமூலமான மகஜர்களை அங்ஙனம் செய்ய விரும்பின் கடற்றொழில் அதிபரவர்களுக்கு, த. பெ. இல. ம்31, காலிமுகம், கொழும்பு — 3 இலுள்ள அன்னவர் காரியாலயத்திற்கு 1963 ம் ஆண்டு பெப்ருவரி மாதம் 28 ம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்குமாறு செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன்

5. இத்தகராற்றின் விடயத்தையிட்டு திருகோணமலை நகர மண்டபத்தில் 1963 ம் ஆண்டு மார்ச்சு மாதம் 11, 12, 13, 14, 15 ம் திகதிகளில் தினமும் மு. ப. 10 மணிக்கு அல்லது இது ஒத்திபோடப்படும் அத்தகைய எனைய தினங்களில் பகிரங்க விசாரணையொன்றை யான் நடத்துவேன். சமுகமளிக்க அருகதையும் தங்கள் மகஜர்களுக்கு ஆதாரமாகச் சாட்சியமும் அளிக்கும் யாவரும் நேராகவோ அல்லது வக்கீல் மூலமாகவோ நண்பர் மூலமாகவோ அல்லது பரிந்து வாதாடுவோர் மூலமாகவோ தெரிபடலாம்.

பிறெட் ஈ. அலஸ்,
பாம் வீதி,
கொழும்பு — 15.

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

# தமிழரசு வாலிப முன்னணி மகாநாடு

## நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், வெள்ளி

இலங்கைத் தமிழரசுக்கட்சி வாலிபமுன்னணியின் 9-வது தேசிய மகாநாடு யாழ்ப்பாணம் மாநகரசபை மண்டபத்தில அமைக்கப்படும் ஏகாம்பரம் அரங்கில் சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் நடைபெற விருக்கின்றது. நிகழ்ச்சிகள் சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு முன்னைள் சொலிஸிட்டர் ஜெனரல் திரு. எம். திருச்செல்வம் கொடியேற்றி விழாவைத் தொடக்கிவைப்பதுடன் ஆரம்பமாகும். கொடிவணக்கம், வரவேற்புரை, தலைமைப் பேருரை என்பனவற்றைத் தொடர்ந்து பண்டிதர் கா. பொ. இரத்தினம் தலைமையில் கலாச்சார மகாநாடு நடைபெறும். மாலை ஆறுமணிக்கு வவனியா பட்டினசபைத் தலைவர் திரு. ச. சுப்பிரமணியம் தலைமையில் அரசியல் மகாநாடு ஆரம்டமாகி நடைபெறும். பின் நடன, நாடக நிகழ்ச்சிகள் நடைபெறும்.

ஞாயிறுகாலை 10 மணிக்கு இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள் உடுவில் கிராமசபைத் தலைவர் திரு. ஆ. ஹென்றி தலைமையில் தொழிலாளர் மகாநாட்டுடன் ஆரம்பமாகும்.

பிற்பகல் 3 மணிக்கு நல்லூர் சந்தை வன்னியசிங்கம் படிபகத்தில் இருந்து ஊர்வலம் ஆரம்பமாகி யாழ்ப்பாணம் கோட்டை மைதானத்தை வந்தடையும். மாலை 5 மணிக்கு கோட்டை மைதானத்தில் அமைக்கப்படும் வன்னியசிங்கம் அரங்கில் திரு. சி. கதிரவேலுப்பிள்ளை தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெறும். பாராளுமன்ற உறுப்பினர்களும் மலைநாட்டுத் தொழிற் சங்கப் பிரதிநிதிகளும் பொதுக் கூட்டத்தில் சொற்பொழிவுகள் நிகழ்த்துவர் என்று தெரிகிறது.

பட்டிருப்பு எம். பி.யும் தமிழரசுக் கட்சித்தலைவருமான திரு. எஸ். எம். இராசமாணிக்கம் இன்று யாழ்ப்பாணம் வருகிறார்.

மூன்று தினங்கள் இங்குதங்கியிருக்கும் திரு. இராசமாணிக்கம் வாலிபமுன்னணி மாநாட்டிலும் மற்றும் முக்கிய பல நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்ளவிருக்கிறாரெனத் தெரிகிறது.

## வரி விளம்பரம்

### திருமண அழைப்பு

**மகாலிங்கம்—இராசலட்சுமி**

திரு. வ. மகாலிங்கம் (கௌரவ பொதுச் செயலாளர், அகில இலங்கை அரசினர் பாடசாலை தமிழர் ஆசிரியர் சங்கம்; ஆசிரியர், கொ/மகாவத்தை அரசினர் தமிழ் வித்தியாலயம்) அவர்கட்கும்

சுழிபுரம், சிவலோகர் சேதுகாவல்பிள்ளை அவர்களின் பௌத்திரி

**செல்வி. கணபதிப்பிள்ளை இராசலட்சுமிக்கும்**

3-2-63 ஞாயிறுகாலை 7-16 க்கும் 10-35 மணிக்குமிடையில் வரும் சுபவேளையில் சுழிபுரம் மணமகள் இல்லத்தில் திருமண வைபவமும், அன்று மாலை 4 மணியளவில் மணமகன் இல்லத்தில் வரவேற்புபசாரமும் நடைபெறும். [illegible]னிப்பட்ட அழைப்பில்லை. இதனை யாவரும் அங்கீகரித்து ஏற்கவேண்டுகின்றேன்.

இப்படிக்கு,
காலநிதி வ. கணேசலிங்கம்,
மணமகளின் சகோதரர். கொல்லங்கலட்டி, தெல்லிப்பழை.
26-1-63.

### வீடு வாடகைக்கு

யோகவனம், கருவேலடி லேன், கொக்குவில் கிழக்கு. சகல வசதி (மின்சாரம், குளாய்த்தண்ணீர்) களுடனுமுண்டு. விபரங்கட்கு மு. க. சின்னையா, திருநெல்வேலி கிழக்கு அல்லது பொன்னுத்துரை பத்தர், கொக்குவில் கிழக்கு.
679

சிறந்த சேமிப்பு
அதிக ஆதாயம்
உயர்ந்த வட்டி
6%
உறுதியான இடம்
சிலோன் றிசேவ்
லிமிற்றெட், வங்கி
யாழ்ப்பாணம்.

### For Sale

One Remington Kardex Cabinet with sixteen drawers and one Remingtion Pin-point English Typewriter. Both in good condition. Disposal for highest offer. Can be seen during office hours at our office 'President, Kilinochchi west M. P. C. S. Ltd., Kilinochchi

665 Hony. Secretary.

தொய்வு: நீரிழிவு

குணப்படுத்த உத்தரவாதம் மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற சிரங்கள் அடங்கிய கற்றலோக இளம். தொய்வுகளு 10 நாள் மருந்து 12/50 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50.
வைத்தியர் பரிபூரணாநந்தர் கைலாயபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

## உலக சஞ்சலத்தை நீக்கினர் பிரதமர்

—எம். பி.

மிரிகம, வியாழன்

"பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்காவின் புத்திக் கூர்மைதான் போரில் தத்தளிக்கவிருந்த உலகத்தையே பாதுகாத்துள்ளது. சீன-இந்திய எல்லைத் தகராறு நீடித்திருக்குமானல் உலகம் பூராவுமே சஞ்சலப்பட வேண்டியிருந்திருக்கும்"

இவ்வாறு மிரிகம எம். பி. திரு. விஜயபாகு விஜயசிங்கா கித்துல்கலவில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் தெரிவித்தார். அவர் மேலும் பேசியதாவது:-

சீன-இந்திய எல்லைப் பிரச்சனை தொடர்ந்து நடைபெற்றிருக்குமானல் இந்தியா மேற்கு நாடுகளின் உதவியை பெற்றிருக்கும்சீனவோ இதை எதிர்ப்பதற்குவேறுநாடுகளின் உதவியை கோரியிருக்கும். இதனல் உலகிலே போர் மூண்டு உலகம் பூராவும் உள்ள மக்கள் சஞ்சலப்பட்டிருக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கும். ஆனல் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா த[illegible]ந்த நேரத்தில் இதில் தலையிட்டு உலக அபாயத்தை தடுத்துவைத்தார்.

அதிக நெல் விளைச்சல் உடைய பர்மா, ஜப்பான் போன்ற நாடுகளிலேயே ஒரு கொத்து அரிசி 75 சதமும், 73 சதமும் விற்கப்படுகின்றன இவற்றுடன் ஒப்பிட்டால் இலங்கையில் ஒரு கொத்து அரிசி 25சதத்திற்கு விநியோகம் செய்யப்படுவது முறையற்ற ஒன்றும்.

*ஆசிரியருக்குக் கடிதங்கள்*

# கண்டி பெரமுனை

முற்காலத்தில் கண்டி இராசதானிகள் ஓங்கியிருந்த பிரதேசத்தில் அமையப் பெற்றிருக்கும் இலங்கைப் பல்கலைக்கழகம் கண்டி மக்கள் தவிர நாட்டின் மற்ற எல்லாப் பகுதியினருக்கும் நன்மை தருகிறதென்று கண்டிய பெரமுனை அழுகுரல் வைப்பதைப் பார்த்து ஒருவர் அனுதாபப் படுவதைத தவிர வேறு என்ன செய்யலாம்? கண்டி சிங்கள மக்கள் பேராதனைப் பல்கலைக் கழகத்தினல் நன்மை அடையவில்லையா? இதே பல்கலைக்கழகத்தினல் இன்று நன்மை அடைபவாரில் நூற்றுக்கு 90 விகிதத்தினர் சிங்கள மக்கள்தான். இதைத்தவிர இரண்டு சிங்கள பிரிவேனா பல்கலைக் கழகங்கள் வேறு இருந்து வருகின்றன.

இலங்கையின் ஏனைய பகுதிகளில் வசிக்கும் சிங்கள மக்களிடமிருந்து தாங்கள் வேறுபட்ட ஒருதனிப்பிரிவினர் என்று இவர்கள் தங்களை எண்ணிக்கொள்கிறார்களா? அல்லது தங்கள் நிலையைத் தாங்களே நிர்ணயித்துக்கொள்ளக் கூடிய ஆற்றலிழந்தவர்களாயிருக்கிறார்களா? பின் எதற்காக சிங்களவர்களினலேயே பெரும் பகுதியும் நிரப்பப்பட்டிருக்கும் சிங்கள பல்கலைக் கழகங்களை கண்டி சிங்களவர் பயன் படுத்திக் கொள்ளமாட்டாமலிருக்கிறார்கள்?

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் நூற்றுக்கு 74 விகிதம் பௌத்த சிங்களவரே கல்வி கற்க அனுமதிக்கப்பட வேண்டுமென்று தேசிய கல் விசாரணைக்குழு சிபார்சு செய்திருக்கிறது' கண்டி சிங்களவர் பௌத்த மதத்தினராவதோடு சிங்களவர் என்ற பெரும் பிரிவுக்குட்பட்டவராயுமிருக்கிறார்கள். மேலும் கிறிஸ்துமதத்தினராயிருக்கும் சிங்களவருக்கு தேசிய கல்விக் கமிஷன் மற்றொரு 'கோட்டா' அளவை விதித்திருக்கிறது. இதையும் சேர்த்துக் கொண்டால் நூற்றுக்கு 80 விகிதம் சிங்கள மக்களே பல்கலைக் கழகத்தில் சேர்ந்து கல்வி கற்பதற்கு வசதி செய்யப்பட்டிருப்பது வெளிப்படை.

தேசத்தின் வருமானத்தில் நூற்றுக்கு 65 விகிதம் கண்டி மாவட்டங்களிலிருந்தே கிடைத்த போதிலும் கண்டி மக்களின் கோரிக்கைகள் புறக்கணிக்கப்பட்டு வருவதாக பெரமுனை மேலும் குற்றம் சாட்டுகிறது.

பெரமுனை குறிப்பிடும் பகுதிகள் கண்டிப் பிரதேசத்திலிருப்பது என்னவோ உண்மைதான். ஆனல் அங்கிருந்து பெறப்படும் உற்பத்திகள் அனைத்தும் கண்டி மக்களுக்குச் சொந்தமானதா? பெரமுனை குறிப்பிடும் வருமானத்தில் நூற்றுக்கு 90 விகித வருமானத்தைத் தேடித்தருவது தோட்டத் தொலாளர்களான தமிழ் மக்களின் உழைப்பு என்று சொல்லியிருந்தால் அது பெரமுனையின் சார்பில் பிறர் கவனத்தை திருப்பக்கூடியதாயிருந்திருக்கும். பெரமுனையின் கோரிக்கையில் சரி பாதி அளவேனும் மலைநாட்டுத் தொழிலாளரின் குழந்தைகளுக்காக ஒதுக்கப்படும் ஒரு கருணை ஏற்படும்.

இங்கெல்லாம் வாழும் இந்த தமிழர்களில் பெரும் பகுதியினர் நாடற்றவர்களாக்கப் பட்டிருப்பதோடு அவர்களது உரிமையும் பறிமுதல் செய்யப்பட்டிருக்கிறது. இவர்களது பிள்ளைகள் சிங்களப் பாடசாலைகளில்தான் கல்வி கற்க வேண்டுமென்று நிர்ப்பந்திக்கப்படுகிறது. அத்தனை பேரையும் காலகதியில் கண்[illegible] சிங்களவராக்கி விடுவதற்கு [illegible]ணுகிறார்கள் போலும். [illegible]தப் பெரமுனை அதன் பெய[illegible]சேர்ந்தாற்போல மெய்யா[illegible] ஒரு பெரிய போர் முனையாகி விடுமானல் அப்போது இந்த தமிழ்க் குடிகளின் நிலை இருமடங்கு ஆபத்தானதாகி விடும்.

எஸ். ஜே. குணசேகரம்
கோப்பாய்

## பாடசாலை புனரமைப்பு வேலைகள் நிறுத்தப்பட்டன

கொழும்பு, வியாழன்

கல்வி அமைச்சர் ஜனப் பதியுதீன் மாமூத் தமது தேசியகல்வி மசோதாவை சமர்ப்பிக்கும் வரை கல்வி இலாகாவின் பாடசாலைகள் புனரமைப்புத்திட்டம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே செய்யப்பட்ட திருத்தங்கள் அவ்விதமே இருக்குமென கல்வி இலாகாவைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

குறிப்பிட்ட சில பகுதிகளில் இவ்வித புனரமைப்புத்திட்ட வேலைகளுக்குள திர்ப்புத்தெரிவிக்கப்பட்டதும் இவ்விதம் இந்த வேலைகள் செயல்படுத்தப் படாது நிறுத்தப்பட்டதற்கு ஒருகாரணம் என அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

தேசிய கல்விக் கமிஷன் இறுதி அறிக்கை பற்றி ஆராய்ந்து கொண்டிருந்த பொழுது கல்வி இலாகா புனரமைப்புத் திட்டவேலைகளைச் செயல்படுத்திக்கொண்டிருந்ததாக கமிஷன் கல்வி அமைச்சருக்கு ஆட்சேபம் தெரிவித்திருந்ததைத் தொடர்ந்து முன்னர் இந்த வேலைகள் நிறுத்தப்பட்டன

கல்வி அமைச்சர் தேசிய கல்வி மசோதாவை விரைவில் பார்லிமெண்டில் சமர்ப்பிப்பார் என அறியப்படுகிறது. தேசிய கல்விக் கமிஷனின் சிபார்சுகளை எவ்விதம் அமுல் நடத்தலாமென்பதுபற்றி ஆராய்ந்து தெரிவிக்க அமைச்சரால் நியமிக்கப்பட்ட கமிட்டி தனது இறுதி அறிக்கையை அமைச்சரிடம் சமர்ப்பித்துள்ளது.

## ரயிலில் கலாட்டா!

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணத்திலிருந்து நேற்று மாலை காங்கேசன் துறைக்குப் புறப்பட்ட புகையிரதத்தில் குடிவெறியில் இருந்த ஒருவர் பாடசாலை மாணவரின் புத்தகங்களை எடுத்துக் கொண்டு குழப்பம் விளைவித்ததால் புகையிரதம் சுன்னாகத்திற்கும் இணுவிலுக்குமிடையே சில நிமிஷங்கள் நிறுத்தப்பட்டது.

இணுவிலில் இருந்து புறப்பட்ட புகையிரதத்தில் மாணவர் ஒருவரின் புத்தகங்களை குடிவெறியில் இருந்தநபர் எடுத்துக் கொண்டு அப்பெட்டியில் இருந்த மாணவர்களைத் தூஷித்தார். மாணவர்கள் அபாயச் சங்கிலியை இழுத்து வண்டியை நிறுத்தி 'கார்டி'டம் அந்த நபரை ஒப்படைத்து புகார் செய்தனர். பின் பெட்டியில் குழப்பம் விளைவித்த நபர் சுன்னாகம் புகையிரத நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார்.

## தேடுதல் விமான விபத்தில் 14 பேர் பலி

வாஷிங்டன், ஜன. 15

அமெரிக்க கடற்படையைச் சேர்ந்த நீர்மூழ்கிக்கப்பல் ஒன்றைத் தேடுவதில் ஈடுபட்டிருந்த விமானமொன்று கடலில் விழ்ந்து நொருங்கியது. இதில் சென்ற 14 சிப்பந்திகளும் மாண்டனர்.

# விமான எதிர்ப்பு ஏவாயுதம் இந்தியாவுக்கு கிடைக்கும் வாய்ப்பில்லை?

## "கொழும்பு யோசனையை சீன ஏற்காததால் உஷார் அவசியம்"

### இந்தியப்பிரதமர் நேரு அறைகூவல்

லண்டன், ஜன. 31

இந்திய விமானப்படையைத் திருத்தி அமைப்பது சம்பந்தமாகவுமீ இந்திய விமானப்படைகளின் தேவைகள்பற்றி ஆராயவும் இந்தியாவுக்குச் செல்லும அமெ அமெரிக்க, காமன்வெல்த் விமானப்படை நிபுணாகுழு இந்தியாவில் நான்கு வாரங்கள் தங்கியிருக்கும். "எதிரியின் போர்விமானங்களைத் தாக்கி வீழ்த்தும் ஏவுகணைகளை இந்தியாவுக்குக் கொடுத்து உதவும் வாய்ப்பு எதுவும் இல்லை" என்று இக்குழுவின் தலைவரான பிரிட்டனைச் சேர்ந்த கமடோர் மௌண்ட் தெரிவித்தார்

### லண்டனில் காந்திதினம்

மகாத்மாகாந்தியின் நினைவுதினம் நேற்று லண்டனில் கொண்டாடப்பட்டது. லண்டனிலுள்ள இந்திய ஸ்தானிகரும் இந்தியர்களும் மற்றும் பலரும் கலந்து கொண்ட இந்தவைபவத்தில் பிரிட்டிஷ் பார்லிமெண்ட் அங்கத்தவர் செல்வி ஜென்னி லீ பேசுகையில், மகாத்மாவின் போதனைகள் இன்றுதான் உலகுக்கு மிகமிக அவசியமும் பொருத்தமுமாகும் என்று கூறினர்.

### 'சீன ஏற்காததால் பாதுகாப்பு முயற்சி அவசியம்'

கொழும்பு மகாநாட்டு யோசனைகளை சீன இன்னும் ஏற்றுக் கொள்ளாததால் பாதுகாப்பு முயற்சிகளைத் தீவிரமாக்க வேண்டியது அவசியம் என்று பிரதமர் நேரு தியாகிகள் தினத்தையொட்டி நேற்று மாலை டில்லியில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசுகையில் கூறினர். காந்திஜி சுதந்திரத்தை எங்களுக்குப் பெற்றுக் கொடுத்தது மட்டுமல்ல அஞ்சாமையையும் ஒற்றுமையையும் எங்களுக்குப் போதித்தார். அஞ்சாமையும் ஒற்றுமையும் சீன ஆக்கிரமிபபு ஏற்பட்டுள்ள இச்சமயத்தில் அவசியம் தேவையான முக்கிய பண்புகளாகும் எனறு பிரதமர் கூறினர். "இந்திய-சீன எல்லைப் பிரச்னைக்குச் சமாதானத் தீர்வு காண்பதற்கென கொழும்பு மகாநாடு தெரிவித்த யோசனைகளை இந்தியா அப்படியே ஏற்றுக் கொண்டுவிட்டதென்பதை இலங்கைப் பிரதமருக்கு நாம் தெரிவித்துவிட்டோம். ஆனல் அந்த யோசனைகளை சீன இன்னும் ஏற்றுக் கொள்ளவில்லை. சீன இன்னும் ஏற்றுக் கொள்ளாததால் நாம் நமது பாதுகாப்பு முயற்சிகளில் தீவிர கவனம் செலுத்தி அவற்றைத் துரிதப்படுத்த வேண்டியது அவசியம். சண்டை ஓய்ந்திருப்பதால் அசமந்தமாக இருக்கக் கூடாது. இப்பிரச்னை முற்ருகத் தீராதவரை நாம் சீனமீது நம்பிக்கை வைக்க முடியாது என்று பிரதமர் கூறினர்.

### சமாதானத்தை விரும்புவது யார்?

"கொழும்பு மகாநாட்டு யோசனைகளைக் கொள்கையளவில் ஏற்றுக் கொள்வதாக முதலில் சீன தெரிவித்தது. இப்பொழுது அந்த யோசனைகள் இந்தியாவுக்குச் சார்பாக இருப்பதாகக் கூறத் தொடங்கியுள்ளது. சமாதானத்தை விரும்புவது சீனவா? இந்தியாவா? என்பது இப்பொழுது உலகுக்குத் தெளிவாகத் தெரிந்துவிட்டது. இருவல்லரசுமுகாம்களும் இந்தியாவை ஆதரிக்கின்றன. சீனவின் கூட்டாளியாக சோவியத்யூனியன் இருந்துவந்த போதிலும் நமது பக்கமே அதன் ஆதரவுஉள்ளது. அல்பேனியாவைத் தவிர இதர கம்யூனிஸ்ட் நாடுகள் சீனவை ஆதரிக்கவில்லை" என்று பிரதமர் நேரு கூறினர். அவர் தொடர்ந்து பேசுகையில் சோவியத் யூனியன் யுத்தத்தை விரும்பவில்லை. சீனவோ யுத்தத்தையே விரும்புகிறது. யுத்தத்துக்காக கோடிக்கணக்கான தனது மக்களைப் போட்டுத் தயார் செய்திருக்கிறதென்றும் கூறினர்.

### நீதிமன்ற யோசனைக்குப் பதில் இல்லை

"இந்திய-சீன எல்லைப் பிரச்னையை உலகநீதிமன்றத்துக்குக் கொண்டு போகலாம் என்று நாங்கள் தெரிவித்த யோசனைககு சீன இன்னும் பதில்தரவில்லை. சமாதானப்பாதையையே நாம் பினபற்றுகிறேம். சமாதானப் பாதை படைபலத்துக்குப் பணிந்து சரணுகதியடைவதல்ல எல்லோருடனும் நட்புறவாக வாழவே இந்தியா விரும்புகிறது. பாகிஸ்தானுடனும் சீனவுடனும் உறவு கெட்டுப்போனது வருந்தத்தக்கது" என்று பிரதமர் நேரு கூறினர்.

### அஹிம்சையும் படை உபயோகமும்

திபெத்தில் படைகளைக் குவித்து தயார் செய்து வருகையில் நட்புப் பேச்சுப்பற்றிக் கூறுகிறது இதற்கு நாம் ஏமாந்துவிடக் கூடாது. நமது பாதுகாப்பு முயற்சிகள் அஹிம்சைக்கு மாறானதல்ல. அஹிம்சை கோழைகளின் ஆயுதமல்ல. மனத்துணிவும் தைரியமும் உள்ளவர்களுக்கே அஹிம்சை ஒரு ஆயுதம். நோக்கங்கள நல்லதாக இருப்பின் சக்தியைக் கட்டாயமாக உபயோகிகக வேண்டியேற்படினும் அது அஹிம்சைக்கு மாருகாது. காஷ்மீரில் படையெடுப்பு ஏற்பட்டபோது மக்களைப் பாதுகாக்க நாம் படையை அனுப்புவதற்கு காந்திஜியே அனுமதியளித்தார்" என்று பிரதமர் நேரு தெரிவித்தார்.

### சீனபற்றி எழுத்தாளர்

நோபல் பரிசுபெற்ற பிரபல எழுத்தாளரான பேர்ள்பக் நேற்று பம்பாயில் ஒருவைபவத்தில் பேசுகையில், சீனவின் கடந்தகால நடவடிக்கை முதலில் தாக்குவது, பின்னர் விலகுவது அதற்குப் பின்னர் தேக்க நிலையை ஏற்படுத்துவதாகவே இருந்து வந்திருக்கிறது என்று கூறினர். சீன இன்னும் மத்திம காலத்திலேயே இருந்து வருகிறதென்றும் சீன-சோவியத் பிளவு தவிர்க்கப்பட முடியாதென்றும் அவர் கூறினர்.

### மேட்டூர் மின்சார அமைப்பு

தமிழ்நாட்டில் மேட்டூர்சுரங்க கால்வாய்3-வது4-வதுமின்சாரநிலைய அமைப்புவேலைகள்சோவியத் யூனியனின் உதவியுடன் 1965-ம் ஆண்டில் ஆரம்பமாகுமென்றும் 1966-ம் ஆண்டுக்குள் வேலைகள் முடிவடைந்து விடுமென்றும் அறிவிக்கப்படுகிறது.

### சீன செல்லும் சமாதான அணி

பாரத சாந்திசேனை பீக்கிங்கை நோக்கி சமாதான அணியொன்றை அனுப்ப ஒழுங்குகள் செய்துவருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. பீக்கிங் செல்லும் வழியில் பலகாடுகளைக் கடந்து செல்ல வேண்டியிருப்பதால், இக்காடுகளுக்கூடாக 'ஜீப்' வண்டிகள் மூலம் சமாதான அணி செல்லுமென்றும் பின்னர் பீக்கிவகை நோக்கி சுமார் 4,000 மைல்பாத யாத்திரை செய்வார்களென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

### சுபந்திரியோ—நேரு சந்திப்பு

புதுடில்லிக்கு நேற்று விஜயம் செய்த இந்தோனேஷிய வெளியுறவு மந்திரி டாக்டர் சுபந்திரியோ, சீனப்பிரதமர் திரு. சூ-என்-லாயிடமிருந்து தமக்குக் கிடைத்த செய்தியை பிரதமர் திரு. நேருவிடம் நேற்று கொடுத்தார். நேற்றுப் பிறபகல் பிரதமர் நேருவை டாக்டர் சுபந்திரியோ சந்தித்து, ஒருமணிநேரம் பேச்சுவார்த்தைநடத்தினர்

## 'டாக்டர்கள் பொறுமையோடு கடமையாற்றவேண்டும்'

### பட்டினசபை கோரிக்கை

யாழ்ப்பாணம், வியாழன்

காங்கேசன்துறை பட்டினசபையின் விசேஷ கூட்டம் தலைவர் திரு. மு கிட்டவீரசிங்கம் தலைமையில் நடைபெற்றபோது பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன:

சுகாதார சேவை அத்தியட்சகரின் கவனத்திற்கு பின்வரும் தீர்மானங்களைப் பட்டினசபை சமர்ப்பித்துள்ளது.

இந்திய வம்சாவளி நபர் ஒருவர் சென்ற ஆண்டு மார்கழி மாத இறுதியில் நோயினல் பிடிக்கபபட்டு காங்கேசன்துறை அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். அவர் அங்கு நடக்கும் அநீதிகளை வைத்தியருக்குச் சுட்டிக் காட்டிய காரணத்தால் அவர் நோய்வாய்ப்பட்டிருந்த போதும் வைத்திய நிலையத்திலிருந்து வெளியேற்றப்பட்டார். ஆதரவு அற்ற அனதையாகி நோயின் வேதனை தாங்கமுடியாது முனகிக்கொண்டு ஆஸ்பத்திரி வாசலில் இருந்த இவரைக்கண்ட அங்கு கடமையாற்றும் தொழிலாளர்கள் சிலர் மனம்நொந்து அவருக்கு உதவும்பொருட்டு தங்கள் மத்தியில் சிறு நிதி திரட்டி வெளி வைத்திய உதவி அளித்தனர். அவர் ஓர் ஏழையானதா[ல்] மேலதிகாரிகளுக்கு இவற்றை எடுத்துக் காட்ட முடியாது போய்விட்டது. வைத்தியர்கள் பொறுமையோடும் ஆதரவோடும் அன்போடும் நோயாளிகளைப் பார்வையிடின் நோய்களில் பாதிநோய் தீர்ந்துவிடும் என்பதில் சந்தேகமில்லை. எனவே வைத்தியர்கள் பொறுமையோடும் அன்புடனும் கடமையாற்றவேண்டும்.

நோயாளருக்குக் கொடுப்பதற்கு வேண்டிய நல்ல மருந்து வகைகள் காங்கேசன்துறை ஆஸ்பத்திரியில் இல்லாமை பெரும் குறையாகும். இசனல் ஏழை நோயாளிகள் பலர் தமது சொந்தச் செலவில் வேண்டிய நன்மருந்து வகைகளை வெளியே இருந்து விலைக்கு வாங்கி உபயோகித்துச் சிகிச்சை பெறவேண்டியுள்ளது. இவ்வாறு ஏழை நோயாளிகள்மீது சுமத்தப்படும் சுமையை தவிர்த்து வேண்டிய மருந்துகளைக் கொடுக்க ஆஸ்பத்திரிக்குப் போதிய மருந்து வகைகளை விநியோகிக்கவேண்டும்.

கட்டாக்காலி மாடுகள் ஆஸ்பத்திரி வளவுக்குள் புகுந்து நோயாளருக்கும் அங்கு கடமைபார்க்கும் ஊழியர்கட்கும இடைஞ்சலை உண்டாக்குகின்றமையினல் ஆஸ்பத்திரி வளவு வேலிகளை அடைத்து இடைஞ்சலை நீக்கவேண்டும்.

வேறும் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

---

## ரயில் நேரம்

காலை 5-20-க்கு காங்கேசன் துறையில் இருந்து புறப்படும் உத்தர தேவி 5-40-க்கு யாழ்ப்பாணத்தையும் பகல் 1-30-ககு கொழும்பையும் அடையும்.

காலை 6-45-க்கு காங்கேசன் துறையில் இருந்து புறப்படும் வண்டி 7-35-க்கு யாழ்ப்பாணத்தையும், மாலை 6-45-க்குகொழும்பையும் வந்தடையும். யாழ் தேவி பி. பகல் 2-05-க்கு புறப்பட்டு2-25க்குயாழ்ப்பாணத்தையும் இரவு 9-50-க்கு கொழும்பையும் வந்தடையும். மாலை 5-55-க்கு காங்கேசன்துறையில் இருந்து புறப்படும் மெயில் வண்டி 6-50-க்கு யாழ்ப்பாணத்தையும் காலை 5-30-க்கு கொழும்பையும் போய்ச்சேரும்.

## மலாயா ஸ்தானிகர் ஜாகர்த்தாவிலிருந்து திரும்பினர்

கோலாலம்பூர், ஜன. 31

மலாயாவுக்கும் இந்தோனேஷியாவுக்குமுள்ள உறவு சீர்குலைந்துவருகிறது. ஜாகர்த்தாவிலுள்ள மலாயா ஸ்தானிகர் மலாயா அரசாங்கத்தின் உத்தரவின் மீது கோலாலம்பூருக்குத் திரும்பிவந்து சேர்ந்துள்ளார். கோலாலம்பூரிலுள்ள இந்தோனேஷிய ஸ்தானிகர் சென்ற மாதம் திருப்பி அழைக்கப்பட்டுவிட்டார்.

இந்தோனேஷியக் கடலில் மலாயா மீனவர்கள் மீன்பிடிப்பதற்கு இந்தோனேஷியா தடைவிதித்ததும் புருனைய் புரட்சியை இந்தோனேஷியா ஆதரித்ததுமே மலாயா-இந்தோனேஷியா உறவு கெடுவதற்குக் காரணமெனத் தெரிகிறது.

மலாயா ஸ்தானிகர் திருப்பி அழைக்கப்பட்டு விட்டபோதிலும் இந்தோனேஷியாவுடனுள்ள ராஜீய உறவைத்துண்டிக்கும் உத்தேசம் இப்பொழுது இல்லையென்று மலாயா அரசாங்க அதிகாரிபெருவர் [கூ]றினர்.

---

## பௌத்த மதமும் சோஷலிஸ தர்மமும்

### பாடசாலை விழாவில் குருநாகல் எம். பி.

குருநாகல், வியாழன்

"1956-ம் ஆண்டு காலஞ்சென்ற பிரதமர் திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா இலங்கையில் பௌத்த சமயத்திற்கு உரிய இடம் கொடுக்க வேண்டு என்று விரும்பினர். ஆனல் அதே நேரத்தில் மற்ற சமயங்களுக்குள்ள உரிமைகளில் தலையிடாமலே பௌத்த சமயத்தை வளர்க்க வேண்டும் என்பதையும் அவர் கருத்திற் கொண்டிருந்தார். சோஷலிஸத்தை அடிப்படையாகக் கொண்டது பௌத்த சமயம். எனவே அதற்கு உரிய ஸ்தானத்தை கொடுப்பதால் மற்றச் சமயங்களின் உரிமைகளில் தலையிடுவதாக அமையாது"

இவ்வாறு பாடசாலை பரிசளிப்பு விழா ஒன்றில் பேசிய குருநாகலை எம். பி. திரு. ஜயபத்திராஜ குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பௌத்த சமயத்திற்கு நாட்டில் உரிய ஸ்தானம் 1956-ல் பண்டாரநாயக்கா அரசாங்கம் அமைக்கப்பட்ட பின்னரே கொடுக்கப்பட்டது. 400 ஆண்களாக ஒதுக்கப்பட்டிருந்த புத்த சமயத்திற்கு காலஞ்சென்ற திரு. பண்டாரநாயக்காவே முதல் முதலில் உரிய ஸ்தானத்தைக் கொடுத்தார்.

---

## காந்தி நினைவுதினம்

யாழ்ப்பாணம், வெள்ளி

கல்வியங்காடு ஞானபாஸ்கரோதய சனசமூகநிலையம் மகாத்மாகாந்தி நினைவுவிழாக் கொண்டாடியது. திரு. ச. நவரத்தினம் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் திரு. செ. நாகரசா, திரு ச. ...பந்தர் ஆகியோரும் பேசினர். காந்தி அடிகளின் ஆத்மா சாந்தியடைய இரு நிமிடநேர மௌனம் அனுஷ்டிக்கப்பட்டது. திரு. யோகானந்தர் நன்றி கூறினர்.

## மணி வாக்கு

மிக வலுவுள்ளவர்களுக்கு எவ்வளவு உரிமையும் சந்தர்ப்பமுமுண்டோ அவ்வளவு மிக பலவீனர்களுக்கும் இருக்க வேண்டும். ஜனநாயகத்தைப் பற்றி இதுவே என் கருத்து. அஹிம்சை முறையல்தான் இது நிறைவேற முடியும்.

— மகாத்மாகாந்தி

ஈழநாடு

EELANADU National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம் சுபகிருது ஆண்டு தை மீ 19உ (1-2-63)

## நோயாளர் புகார்

யாழ்ப்பாணம்பெரியாஸ்பத்திரியில் வேலை பார்க்கும் சிப்பந்திகள் சமீபத்தில் சிரமதான இயக்கம்நடத்தி நோயாளருக்கு அன்று விசேஷசேவை செய்தனர். இப்போது சிப்பந்திகளைபற்றி நோயாளர் கூறும் புகார்களைக் கவனிக்கையில், சிரமதான இயக்கம் நடத்திய தினத்துடனேயே அந்தச் சேவையைச் சிப்பந்திகள் மறந்துவிட்டார்களோ என்று சந்தேகப்பட வேண்டியுள்ளது.

அன்று நடந்த கூட்டத்தில் பேசிய பெரியடாக்டரொருவர், சிப்பந்திகள் அன்புடன் நோயாளருக்குத் தங்கள் கடமையை அன்புடன் உண்மையாகச் செய்ய வேண்டியதை சரியாக அறிவுறுத்தினர். ஆஸ்பத்திரிக்குவரும் நோயாளரின் உயிர் அங்குள்ள சிப்பந்திகள் கைகளில்தான் பெரிதும் உள்ளது. அன்பான நல்ல சேவை அங்கு கிடைக்குமென்று நோய்ப்பட்ட பொதுமக்கள் அங்கு ஆவலுடன் வருகின்றார்கள். ஆஸ்பத்திரியிலுள்ள எல்லோருக்கும் பொதுமக்கள் செலுத்தும் வரிப்பணத்திலிருந்துதான் ஊதியமளிக்கப்படுவதால், பொதுமக்களே தங்களது உண்மையான எஜமானர்களென்பதை அவர்கள் மறக்கப்படாது. இதை மறவாமல் தங்களது புனித கடமையை அவர்கள் அன்புடன் உண்மையாகச் செய்தால் அவர்களுக்கு அதிகசலுகைகள் கிடைக்க முடிவதாக இருக்கும்.

காங்கேசன்துறை ஆஸ்பத்திரியின் நிலையும் மோசமடைந்திருக்கிறதாம். வைத்தியர்கள் அன்போடும் ஆதரவோடும் நோயாளரைக் கவனிக்க வேண்டுமென்றும், நோயாளருக்குத் தேவையான மருந்துகள் அங்கு இல்லையென்றும், இதை உடன் விநியோகிக்க சுகாதாரப்பகுதி அதிபர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் காங்கேசன்துறைப் பட்டினசபைத் தலைவர், சபைக் கூட்டத்தில் ஒரு பிரேரணை கொண்டுவர இருக்கின்றார். வேறு பல ஆஸ்பத்திரிகளிலும் பலபல குறைகள் இருக்கின்றனவென்பது பகிரங்க ரகசியம். ஆஸ்பத்திரி சேவை மற்ற எல்லாவற்றையும்விட அதிமுக்கியமானது; உயிருக்கு மன்றுடும் மாகளைப்பற்றியது. ஆகவே இவ்விஷயத்தில் சுகா

# அதிகரித்துவரும் உலக ஜனத் தொகை

— லூயிஸ் ஹலாஸ் —

**உலக சனத்தொகை 800 கோடியை எட்டிவிட்டது. ஒரு பக்கத்தே சனப்பெருக்கம் மறுபக்கத்தில் அத்தனை உயிர்களுக்கும் உணவளிக்கவேண்டிய பொறுப்பு. இந்த உலகப் பிரச்சினை சர்வ நாடுகளுக்குமே பொதுவாகிவிட்டதொரு நெருக்கடி. இதுபற்றி ஐக்கிய நாடுகள் சபையும் விவாதித்தது........**

ஐ.நா. மகாசபையில் மக்கள் பெருக்கத்தினால் அவதிப்படும் நாடுகளுக்கு ஐ. நா. உதவியளிக்க வேண்டும் என்னும் தீர்மானத்தை நிறைவேற்றியது. அதில் அங்கத்துவ நாடுகள் தங்கள் கொள்கைகளுக்கேற்ப ஆதரித்தும் எதிர்த்தும் வாக்களித்தன. பல நாடுகள் நடுநிலை வகித்தன. தீர்மானத்தின் அடிப்படைப் பிரச்னை இதுதான். உலக ஜனத்தொகை 800 கோடி எல்லையைத் தொட்டுவிட்டது. அதே சமயத்தில் வளர்ச்சிபெற்ற நாடுகளுக்கும் வளம் குன்றிய நாடுகளுக்கும் இடையே உள்ள இடைவெளி அதிகமாகிக் கொண்டு வருகிறது. ஐ. நா. சபையின் முன்னேற்றத் திட்டமும் தேவையைப் பூர்த்தி செய்வதாக இல்லை. எனவே, மக்கள் பெருக்கத்தைரும் பொருளியல் வளர்ச்சியையும் ஒன்றுபடுத்த முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்படவேண்டும். இந்தப் பிரச்னை குறித்து அங்கத்தின நாடுகளிடையே கருத்து வேறுபாடில்லை. ஆனல் இதற்குப் பரிகாரம் மக்கள் கட்டுப்பாடா அல்லது பொருளாதார வளர்ச்சியா என்பதில்தான் வேற்றுமை காணப்படுகிறது. மக்கள் கட்டுப்பாடே சிறந்தது என்று திட்டத்தை ஆதரிக்கும் நாடுகளும், மக்கள் பெருக்கத்திற்கேற்ப பொருளாதார வளர்ச்சியைப் பெருக்க வேண்டும் என்று தீர்மானத்தை எதிர்க்கும் நாடுகளும் வலியுறுத்துகின்றன.

### தீர்மானம்

ஆனல் தீர்மானம், "மக்கள் பிரச்னையைத் தீர்ப்பதற்கு, சம்பந்தப்பட்ட அரசாங்கங்கள் கேட்டுக்கொண்டால், ஐ. நா. உதவியளிக்க வேண்டும்" என்னும் ஒரேவாக்கியத்தைச் சுற்றியே வட்டமிடுறது. தீர்மானத்தின் சொல்லலங்காரம் எந்தத் திமைக்கும் இடம் கொடுக்கவில்லையென்றாலும், ஐ. நா. இந்தப் பிரச்னையைக் கவனத்திற்கு எடுத்துக் கொண்டது. எதிர்காலத்தில் திட்டவட்டமான உதவிபுரிவதற்கு வகை செய்யும் என்று பல தரப்பினரும் கருதுகின்றனர். வழக்கமாக, கெடுபிடிப் போர் பிரச்னைகளில் மேற்கு நாடுகள் ஒருமுகமாகவும், ரஷ்ய சார்பு நாடுகள் எதிர்முகமாகவும் வாக்களிக்கும். கோஷ்டி சேரா நாடுகள் நடுநிலை வகிக்கும். ஆனல், இந்த விவாகததில் வேற்றுமை மத ரீதியில் எழுந்தன. கத்தோலிக்க மதபபிரிவினர் அதிகமாக வசிக்கும் நாடுகள் தீர்மானத்தை எதிர்த்தும், பிராட்டஸ்டன்ட் பிரிவினர் அதிகமாக வசிக்கும் நாடுகளும் மக்கள் பெருக்கம் அதிகமாக உள்ள நாடுகளும் தீர்மானத்தை ஆதரித்தும் வாக்களித்தன. ரஷ்யசார்பு நாடுகள் நடுநிலை வகித்தன. முடிவில் 43 நாடுகள் ஆதரவாகவும் 14 நாடுகள் எதிர்த்தும் வாக்களித்தன. 42 நாடுகள் நடுநிலைவகித்தன.

### சோஷலிஸநாடுகளில்

இத் தீர்மானத்தை முழுமுச்சாக ஆதரித்த நாடு ஸ்வீடன் ஆகும். அதற்கு ஆதரவாகப் பெரும்பான்மையான தென்கிழக்கு ஆசிய, மத்திய கிழக்கு, ஆபிரிக்க நாடுகளும், அமெரிக்கா, பிரிட்டன், ஜப்பான் ஆகிய நாடுகளும் வாக்களித்தன. எதிராக கத்தோலிக்க மதப்பிரிவினர் அதிகமாக உள்ள நாடுகளும் வாக்களித்தன. ரஷ்ய சார்பு நாடுகள் நடுநிலை வகித்ததற்குக் காரணம், மார்க்ஸிஸ சித்தாந்தம் மக்கள் பெருக்கத்திற்கு ஏற்பதொழில் பெருக்கம் அதிகரிக்க வேண்டும் என்று வற்புறுத்துவதுதான். ஐ. நா. வில் பேசிய ரஷ்ய சார்பு நாடுகள் துரிதமான திட்டமிடப்பட்ட பொருளியல் வளர்ச்சியினல் சோஷலிஸ நாடுகளில் மக்கள் பெருக்கம் எந்தப் பிரச்னையையும் ஏற்படுத்தவில்லை என்று அறிவித்தார்கள். சீனவின் மக்கள் பெருக்கத்தையும் பஞ்ச நிலையையும் சுட்டிக்காட்டிய பாகிஸ்தான் பிரதிநிதி இதற்கு ரஷ்ய சார்பு நாடுகள் என்ன பதிலளிக்கப்போகின்றன என்று வினவினர்.

### சிக்கலான பிரச்சினை

வழக்கமாக வேறுபட்டு நிற்கும் நாடுகள்கூட, விவாதத்தில் ஒன்றுபடவேண்டிய நிலை ஏற்பட்டது. அமெரிக்காவைப் பொறுத்தவரையில் இது ஒரு சிக்கலான பிரச்னையாகும். குடும்பக்கட்டுப்பாடு அமெரிக்க உள்நாட்டு அரசியலில் விவாதத்துக்குரிய பிரச்னையாகவே இருந்து வருகிறது. என்றாலும், தீர்மானத்தின் மொத்த ரீதியில் அமெரிக்கா ஆதரித்து வாக்களித்தது. இதற்கு விளக்கம் கூறிய அமெரிக்கப் பிரதிநிதி இந்தப்பிரச்னை குறித்து எந்த நிர்ப்பந்தத்தையும் தன் அரசாங்கம் எதிர்க்கிறது என்றும், அதே சமயத்தில் பொறுப்புள்ள விவாதத்தை வரவேற்கிறது என்றும் அறிவித்தார்.

குடும்பக்கட்டுப்பாட்டை ஓர் அதிகாரபூர்வமான பிரச்னையாகவும் ஐ. நா. ஏற்றுக் கொண்டுவிட்டது. எனினும் பிறப்பைக் கட்டுப்படுத்தும் முயற்சியில் ஐ. நா. தீவிர பங்கேற்க இயலாது என்றே பார்வையாளர்கள் கருதுகின்றனர். இந்த ஒரு விஷயத்தில் மட்டும் சம்பந்தப்பட்ட நாடுகளே ஒரு தீர்க்கமான முடிவுக்கு வரவேண்டியிருக்கும். இந்த நாடுகள் ஒரு தெளிவான முடிவை மேற்கொள்வதற்கு மட்டும் ஐ. நா. உதவியளிக்கவேண்டும்.

தார அதிகாரிகளும் சிப்பந்திகளும் அதிக ஊக்கமெடுத்து சேவா உள்ளத்துடனே பணி செய்யக் கடமைப்பட்டுள்ளனரென்பதை நாம் நினைவூட்டத் தேவையில்லை.

## 'ஐரோப்பிய பொதுச்சந்தை'

'ஐரோப்பிய பொதுச் சந்தை'யில் பிரிட்டனைச் சேர்த்துக் கொள்வதுபற்றி சென்ற 1½ மாதங்களாக நடந்துவந்த பேச்சுவார்த்தைகள் முறிந்து போனதும் ஒருவிதத்தில் நல்லதென்றே கூற வேண்டும். உலகநாடுகளெல்லாம் ஒரு பொதுச்சந்தையாக வேண்டியிருக்க, ஒருசில ஐரோப்பிய நாடுகள் மட்டும் கூட்டுச் சேர்ந்து, தங்களுக்கு நன்மையான முறையில் வர்த்தக ஏற்பாடுகளைச் செய்து கொள்வது வெளியிலுள்ள பலநாடுகளுக்கும் சிறப்பாக மூலப்பொருள்களை உற்பத்தி செய்யும்ஆசிய ஆபிரிக்க நாடுகளுக்குப் பெரும் பாதகமாகவும் முடியக் கூடும்.

பிரிட்டனைச் சேர்த்துக் கொள்ளாததால் இந்தியா, இலங்கை, பாகிஸ்தான் முதலிய நாடுகளுக்கு அதிக நஷ்டம் ஏற்படுமென்று எச்சரிக்கிறார் பிரிட்டிஷ் காமன்வெல்த் மந்திரி. இலங்கையின் தேயிலைக்கு இனி சுங்கத் தீர்வைத் தடைகள் ஐரோப்பிய மார்க்கெட்டில் ஏற்படலாமென்றும் அறிவுறுத்துகின்றார். ஆறு ஐரோப்பிய நாடுகளும் கூட்டுச் சேர்ந்து, மற்ற நாடுகளுக்குப் பாதகமான நடவடிக்கை எடுப்பதாயின் முடிவில் அவற்றின் சரக்குகளுக்கும் வெளிநாடுகளில் கிராக்கி குறைந்து அவற்றுக்கே பாதகமாகவும் முடியக்கூடும். இது இருபுறமும் கூர்மையான கத்தி என்பதை மறக்கக் கூடாது.

இப்பேச்சுகள் முடிந்தாலும் இனியும்பிரிட்டன் இந்த "ஐரோப்பிய குடும்பத்தில்" சேரமுயற்சிகளைத் தொடர்ந்து செய்யுமென்று, கிடைக்கும் செய்திகளிலிருந்து ஊகிக்கக் கூடியதாகவுள்ளது. இது எப்படியாயினும் புதிய நிலைமையைச் சமாளிக்க, சிறப்பாக காமன்வெல்த் நாடுகளும் மற்றஆசியா ஆபிரிக்க நாடுகளும்கலந்து பேசி, தக்க பாதுகாப்பு நடவடிக்கைகளைக் கூடிய சீக்கிரத்தில் எடுக்க வேண்டிய அவசியம் அதிகரித்துள்ளது.

## வட இலங்கையில் சிரமதான வேலைகள்

யாழ்ப்பாணம், வெள்ளி

வட இலங்கையில் சிரமதான வேலையை ஏப்ரல் மாதம் 17, 18, 19, 20 திகதிகளில் நடத்துவதென அகில இலங்கை காந்தீய சேவா சங்கம் முடிவு செய்துள்ளது. இலங்கை காந்தீய சேவா சங்கமும், சர்வோதய சிரமதான இயக்கமும் ஒன்று சேர்ந்து இப்போது இந்நாட்டில் தேசிய சக்திகளை வளர்க்கத் திட்டமிட்டுள்ளன.

வட இலங்கையிலும் தென்னிலங்கையிலும் ஏப்ரல் மாதத்தில் சிரமதான வேலைகளைச் செய்வதன் மூலம் சமூக உறவுகளை பலப்படுத்த முடியும் என நம்பப்படுகிறது. வடஇலங்கையில் சிரமதான வேலைகள் 'தர்மபுரம்' என்ற இடத்தில் ஆரம்பித்து நடத்துவதென உத்தேசிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

## ராணி புறப்பட்டார்

லண்டன், ஜன. 31

ஆஸதிரேலியாவிலும் நியுஸிலாந்திலும் சுற்றுப் பிரயாணம் செய்வதற்காக எலிஸபெத் ராணியும் எடின்பரோ கோமகனும் இன்று பிரயாணமானர்கள். இவர்கள் நியுஸிலாந்தில் பதினெரு தினங்களும் ஆஸதிரேலியாவில் ஐந்து வாரங்களும் தங்கியிருப்பார்.

## ஐயாறன் எழுதுவது

ஒரு புறம் கொழும்பு புரட்சி சதி வழக்கிலே வாதாடும் ஜி. ஜி. யாழ்ப்பாணத்துக்கும் பறந்து வந்து, அராலி கொலை வழக்கிலும் குறுக்கு விசாரணை செய்து வாதிப்பதாக பேப்பரில் படித்தேன். அவருக்கு இப்போது ஏகப்பட்ட 'டிமாண்ட்'. சினிமா ஸ்டார்களைப் பார்க்க மக்கள் கூடுவது போல், ஜி. ஜி. யைப் பார்க்க அப்படி மக்கள் கூடுகிறார்கள். யாழ்ப்பாண கோர்ட் வளவிலே அவரைப் பார்க்க பெருங் கூட்டம் கூடிவிட்டதாம்.

சென்ற இரு முறை நடந்த பொதுத் தேர்தல்களிலும் அவர் வெற்றி பெருமற்போனதும் அவரைப் பொறுத்தவரை நல்லதே. அவர் மீண்டும் மந்திரியாகியிருந்தாலும் இவ்வளவு பேரும் புகழும் கிடைக்க முடியுமா? நடப்பதெல்லாம் நன்மைக்குத்தானே!

* * *

சுதந்திரக் கட்சிக்கும் யு. என். பி.க்கும் அரசியல் உறவுகள் பலப்பட்டுவருவதாகத் தெரிகிறது. தேசிய பிரச்னைகளைத் தீர்க்க அரசாங்கத்துக்கு யு. என். பி. பூரண உதவி செய்யுமென்றும், இதுவே தங்கள் கொள்கையென்றும், யு. என். பி. யைச் சேர்ந்த முன்னாள் நிதி மந்திரி எம் டி. எச். ஜயவர்த்தன ஒரு கூட்டத்தில் தெரிவித்தார்.

திரு. டட்லி சேனநாயக்கா, அலரி மாளிகைக்குச் சென்று பிரதமருடன் பேசியபின், பலபல வதந்திகள் கிளம்பியுள்ளதாயும், அப்பொய் வதந்திகளை மக்கள் நம்பிவிடக் கூடாதென்றும் அவர் கூறுகிறார்.

என்ன பொய் வதந்திகள்? தேச உடைமை ஆக்கப்பட்ட இ. போ. ச.வையோ, அல்லது வேறு தேசிய சேவைகளையோ கலைத்து, மீண்டும் தனிப்பட்டவர்களுக்குத் தாங்கள் கொடுக்கலாமென்று வதந்திகள் கிளப்பிவிடப்பட்டிருப்பதாயும், அது சுத்தப் பொய் என்றும் மறுத்துள்ளார் அவர். அதாவது இவ்விஷயத்தில் சுதந்திரக் கட்சிக்கு மாருக யு. என். பி. நடக்காதென்றும், இரண்டும் ஒரே பொதுக கொளகையைக் கடைப்பிடிப்பதாகவும் மறைமுகமாக உறுதி கூறுகின்றார்.

அதுமட்டுமல்ல. இன்னும் சில மாதங்களில் நிதி மந்திரியில் மாற்றம் ஏற்படுமென்றும், இன்றேல்பார்லிமெண்டேகலைக்கபபடுமென்றும் ஒரு சோதிடமும் கூறினர். இவ்வித சோதிடங்கள் பல இதறகுமுன் கூறப்படினும், இப்போது கூறுவதில அதிக முககியம் உண்டு. சுதந்திரக் கட்சியும், யு. என். பி.யும் சேர்ந்து கூட்டு அரசாங்கம் அமைத்து, எம். டி. எச். நிதி மந்திரியாவாரா? இதுபற்றி பலத்த வதந்திகள் அரசியல் வட்டாரங்களில் அடிபடுகின்றன.

**இரண்டும் ஒன்று சேர்ந்துவிட்டால, மொழி, இந்தியப் பிரச்னைகள் என்ன ஆகும்? நடப்பதைப் பொறுத்துப் பார்ப்போம்!**

* * *

வங்காளத்திலுள்ள கம்யூனிஸ்ட் தோழர்களில் நூற்றுக்கு எண்பது பேர் வீதம் சீனர்களுக்கு ஆதரவாளர் என்று சர்வோதயத் தலைவர் ஜயபிரகாஷ் நாராயண் கூறுகிறார். சீனர்கள் சண்டையை நிறுத்தினலும், இந்தியாமீது "கொளகை ஆக்கிரமிப்பை" நடத்திக்கொண்டே போவதாகவும் அகில ஆசியாவையும் கம்யூனிஸ்ட் மயமாக்குவதே இதன நோக்கமென்றும் கருதுகின்றார்.

சீனத்துக்கும் ரஷ்யாவுக்கும் இப்போது கருதது வேறறுமைகள் ஏற்பட்டிருப்பதால், சீனத்துக்கு மாருக இந்தியாவை ரஷ்யா ஆதரிக்குமா?

(5-ம் பக்கம் பார்க்க)

# விவேகானந்தர் வித்திட்ட இந்திய மறுமலர்ச்சி

## இலங்கையின்புனர்வாழ்வுக்கும்உதவியது

### கொழும்பு மேயரின் பழைய நினைவுகள்

கொழும்பு, வியாழன்

மேற்கு நாடுகளில் இந்தியாவின் புகழையும் பெருமையையும் நிலைநாட்டிவிட்டு 1887-ல் தாயகம் திரும்பிய சுவாமி விவேகானந்தர் கொழும்பில் இறங்கியபோது கொழும்பு நகரவாசிகள் சார்பில் அவருக்கு மாபெரும் வரவேற்பு ஒன்று அளிக்கப்பட்டது. வரவேற்புக்குப் பதிலளித்து சுவாமிகள் பேசினர். புகழ்பெற்ற ஓர் அரசியல் வாதிக்கோ அல்லது ஒரு போர் வீரனுக்கோ கோடீஸ்வரரான ஒரு தனவந்தருக்கோ அத்தகைய வரவேற்பு அளிக்கப்படாமல் காவி அணிந்த சந்யாசிக்கு அளிக்கப்பட்டதை அவர் குறிப்பிட்டு சமய விஷயத்தில் ஓர் இந்துமதத்தவரின் மனநிலை எப்படியிருக்கிறது என்பதை இந்த நிகழ்ச்சி பளிங்குபோல் எடுத்துக்காட்டுகிறது என்றார்.

கொழும்பு விவேகானந்த சபை மண்டபத்தில் நடைபெற்ற விவேகானந்த சுவாமிகளின் நூற்றாண்டு ஜயந்தியில் கலந்துகொண்டு சொற்பொழிவு நிகழ்த்திய கொழும்பு நகர மேயர் திரு. சுகததாசா ஏறக்குறைய 75 ஆண்டுகளுக்கு முன்பாக விவேகானந்த சுவாமிகள் இலங்கைக்கு விஜயம் செய்ததுபற்றிக் கூறினர். திரு. திரு. சுகததாசா தமது பேச்சில் தொடர்ந்து கூறியதாவது:-

தேசிய வாழ்வுக்கு மதம் முதுகெலும்பாக வேண்டியதன் அவசியததை சுவாமிகள் அன்று வற்புறுத்தினர். அப்பொழுதுதான் எந்த ஓர் இனமும் ஜீவித்திருக்க முடியும் என்றார். அந்த வரவேற்பு தமக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு என்பதை அவர் ஒப்புக்கொள்ளவே இல்லை. ஆனல் வரவேற்பின் கருத்து புனிதமான நோக்கத்தைக் கொண்டிருப்பதாகக் கூறி அதற்குப் பதிலளித்தார். சுவாமிகள் தமது இலட்சியங்களினலும் போதனைகளினலும் எழுத்தாலும் பேச்சாலும் இந்தியாவுக்கு மாத்திரமன்றி இலங்கையின் புத்தெழுச்சிக்குமே பெரும் பங்கு உதவியிருக்கிருர். இந்தியாவின் மறுமலர்ச்சிககு ஒரு மூல புருஷராக இருந்தார். அந்நாட்டின் மறுமலர்ச்சி இலங்கையின் புனர்வாழ்வுக்கும் தேசிய விடுதலைக்கும் பெரும்பங்கு உதவியிருக்கிறது. என்பதை யாரும் மறுக்கமாட்டார்கள்.

பௌத்த மதம் இந்து மதம் இரண்டினதும் நெருங்கிய பிணைப்பை சுவாமிகள் நன்கு உணர்ந்திருந்தார். மகான் புத்தரிடம் மேலான பக்தியும் விசுவாசமும் கொண்டிருந்தார். உலகை இரட்சிக்கத் தோன்றிய அவதார புருஷர்களில் ஒருவராகவே அவர் புத்தரை மதித்திருந்தார். இந்த மேடையில் நின்று விவேகானந்த சுவாமிகளை நினைவு கூர்ந்து அன்னரைப் பெற்ற பாரத புண்ணிய பூமிக்கு கைகூப்பி அஞ்சலி செலுத்துகையில் எனக்கு மெய்சிலிர்க்கிறது. இம்மாதிரி ஒரு அந்நியோந்நிய பாலம் இரு நாடுகளுக்கும் தொடர்ந்து நீடித்திருக்கவேண்டுமென்றே ஆசைப்படுகிறேன். விவேகானந்த சுவாமிகளின் இந்த நூற்றாண்டு நினைவுவிழாவில் அப்படி ஒரு சங்கற்பமும் பிரதிக்ஞையும் எடுத்துக்கொள்வோம். இன்று நம்மைச் சூழ்ந்துள்ள இன்னல்கள் அனைத்தும் அகன்று இலங்கையும் இந்தியாவும் நேசபாவனையுடன் ஒன்று சேர்ந்து வாழும்காலம் உதயமாகிக் கொண்டிருக்கிறது என்றே நம்புவோம்.

## நிதி நெருக்கடிக்கு அரசாங்கமே காரணம்

### எம். பி. குற்றச்சாட்டு

சொர்ணதோட்டம், வியாழன்

இப்பொழுதுள்ள நிதிநெருக்கடி யாவற்றிற்கும் அரசாங்கமே காரணமென்றும், பல பல சபைகளை நிறுவி அரசாங்கம் பணத்தை வீணே செலவழித்ததாகவும், சொர்ண தோட்ட எம். பி. திரு. பி. எக்கநாயக்கா அரசாங்கத்தைக் குற்றம் சாட்டினர். கலை நிகழ்ச்சியொன்றை ஆரம்பித்து வைத்துப் பேசிய திரு. எக்கநாயக்கா மேலும் தெரிவித்ததாவது -

அரசாங்கம் விதித்துள்ள மறைமுக வரிகளால் பெரிதும் பாதிககப்படுபவர்கள் தொழிலாளர்களே. பிறகும் மந்திரிகள் மேடைகளில் ஏறி தங்களைத் தொழிலாளர்களுககாகப் பாடுபடுபவர்கள் என வர்ணித்துககொள்கிருர்கள். அரசாங்கத்திடம் திட்டவட்டமான கொள்கை எதுவும் கிடையாது. ஆதலால் நாடு அபிவிருத்தியடையுமென்று நம்புவதற்கு இடமில்லை. தாங்கள் ஜனநாயக சோஷலிஸ்ட் வாதிகள் என அரசாங்க எம். பி.கள் புகழ்ச்சி கூறுகிருர்கள்; ஆனல் அவர்கள் சோஷலிஸ்டுகளுமல்ல, ஜனநாயகவாதிகளுமல்ல.

## மேலும் விசாரிக்க உத்தரவு

கொழும்பு, வியாழன்

வெற்றிலை, பீடி, வெற்றுத் தகரங்கள் போன்ற பொருட்களை விற்று வாழ்க்கை நடத்தி வந்த அறுபது வயது நபரொருவர் தனது வீடும், கடையுமான ஒரு பெரிய மரப்பெட்டியாலான குடிசையில் இறந்து கிடக்கக் காணப்பட்டார். முதலில் இவரைப்பற்றிய விபரம் எதுவும் தெரியாமலிருந்தது. ஆனல் இறுதியில் இவரின் கீழ் வேலைபார்த்த ரி. ஜே. தோமஸ் என்பவர் இறந்து கிடப்பவர் முகைதீன் என்பவர் என அடையாளம் கண்டுபிடித்தார்.

கொழும்பு நகர மரணவிசாரணை அதிகாரி விசாரணை நடத்தினர். இறந்தவரை அடையாளம் கண்டுபிடித்த தோமஸ் சாட்சியம் அளித்தார்.

இறந்தவர் வெற்றிலை, பீடி, சிகரெட், வெற்றுத் தகரங்கள் முதலியவற்றை விற்றுவந்தாரென்றும் நாளொன்றிற்கு 75 ரூபாவிற்கு வியாபாரம் நடைபெற்றதாகவும், தனக்கு 4 ரூபா வீதம் நாளாந்தச் சம்பளம் வழங்கிவந்தாரென்றும் தோமஸ் தெரிவித்தார். மரணமானவர் அந்தப் பெட்டிக் கடையிலேயே தங்கியிருப்பதாகவும், எவருடனும் அதிகமாகப் பேசுவதில்லையென்றும், விருந்தினர்கள் எவரும் வந்ததை தான் வேலை செய்யத் தொடங்கிய 12 வருடங்களிலும் கண்டதில்லையென்றும் அவரைப்பற்றி ஒன்றும் தனக்குத் தெரியாதென்றும் தெரிவித்தார். ஒரு கிழமைக்கு முன்னரே தான் வேலையிலிருந்து விலகிச் சென்றதாகவும் அவர் தெரிவித்தார்.

மரணவிசாரணை அதிகாரி தோமஸ் கூறிய சாட்சியில் உண்மை எதுவும் இருப்பதாகத் தென்படவில்லையென்றும் இறந்தவரின் பணம்பற்றி எதுவும் தெரிவிக்கப்படவில்லை என்றும் பொலிஸாரை மேலும் விசாரணை செயயுமாறு உத்தரவிட்டார். இயற்கையால் நிகழ்ந்த மரணம் எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

# "எதிரிகள் அடித்த..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யத்திற்கு பத்மநாதனுடன் சென்றேன். அப்பொழுது சார்ஜன்ட் தர்மலிங்கத்தின் முன்புள்ள ஆசனத்தில் முதலாவது எதிரியும் இரண்டாவது எதிரியும் இருந்தார்கள். சார்ஜன்ட் இருந்த இடத்தில் நான் உட்கார்ந்து வாக்குமூலம் பதியும்படி சொன்னேன். இந்நேரத்தில் 2-வது எதிரி "அந்தக்கதிரையில் உட்கார உமக்கு உரிமையில்லை"யென்று கூறி எனக்கு கதிரை கொடுத்ததற்காக சார்ஜன்ட் தருமலிங்கத்தை கோபித்துக்கொண்டார். பல தடவை நான் அங்கு சென்றபோது அதே இடத்திலிருந்து தான் எனக்கு வேண்டிய அலுவல்களை செய்துகொள்வேன். ஆதலால் நான் அக்கதிரையை விட்டு எழுந்திருக்கவில்லை.

என்னை வெளியில் சென்று பொது ஜனங்களுக்காக போடப்பட்டிருக்கும் ஆசனத்தில் உட்காரும்படி முதலாவது எதிரி சொன்னர். ஆசனத்தை விட்டு எழுந்திருக்காவிட்டால் என்னை வெளியில் தூக்கி எறியப் போவதாகவும் சொன்னர். "பொலிஸாரின் கடமை அதுவானல் அப்படியே செய்யுங்கள்" என்று சாதாரணமாக கூறினேன். அதன் பின் முதலாவது எதிரியும் இரண்டாம் எதிரியும் எழுந்து வந்து எனது தலையில் ஒரே இடத்தில் இருதடவை தங்கள் கைகளால் அடித்தார்கள். அப்போது கீழே விழுந்தேன்."

வழக்கறிஞர்: தருமலிங்கத்தைக கதிரையிலிருந்து இழுத்தீரா?

டாக்டர்: இல்லை.

வழக்கறிஞர்: நீர் ஒரு மல்யுத்த வீரரா?

டாக்டர்: ஆம்.

வழக்கறிஞர்: நீர் போருக்கும் போயிருக்கிறீர்!

டாக்டர்: ஆம். ஆனல் போரில் மல்யுத்தம் புரிவதில்லை

(கோர்ட்டில் சிரிப்பு)

வழக்கறிஞர்: நீர் பொலிஸ் நிலையத்திற்கு முன்பும் வந்திருகிறீர்?

டாக்டர்: ஆம்.

வழக்கறிஞர்: அப்பொழுதெல்லாம் இந்த இடத்தில் தான் இருந்திருக்கிறீரா?

டாக்டர்: ஆம்.

வழக்கறிஞர்: உம்மைத் தூக்கி எறியும்படி சொன்னீரா?

டாக்டர்: இல்லை. 1-ம் எதிரி தான் தூக்கிஎறியப்போவதாகச் சொன்னர்.

வழக்கறிஞர்: 1-ம் எதிரியின் முகத்தில் அடித்தீரா?

டாக்டர்: இல்லை.

அடுத்ததாக வழக்கறிஞர் திரு. கணேசலிங்கம் குறுக்கு விசாரணை செய்தபோது, "ஆள் அடையாள அணிவகுப்பில தான் இரு எதிரிகளையும் அடையாளம் காண்பித்ததாகவும், அதே இரவு 10 மணிக்கு இந்த அணிவகுப்பு நடந்ததாகவும், பாராளுமன்றத்திலும் பொலிஸாரின் தாக்குதல் பற்றி தான் பேசியிருப்பதாகவும் டாக்டர் நாகநாதன் கூறினர்.

சாட்சியாகிய பத்மநாதனை எதிரியின் வழக்கறிஞர் திரு. ஏட்லி குறுக்குவிசாரணை செய்தார். "நான் ஏழாம் வகுப்பு படித்திருக்கிறேன் எனக்கு ஆங்கிலம் விளங்கிக் கொள்ளத் தெரியாது. கடைகளை மூடும்படி சொன்னதை நான் அறிவேன்" என்று சாட்சி கூறினர்.

வழககறிஞர் திரு ஏட்லி: சில கடைகள் திறந்திருந்தன?

பத்மநாதன்: அனேகமாக எல்லா கடைகளும் பூட்டப்பட்டிருந்தன?

வழக்கறிஞர்: கதிரவேலுவின் காயத்தைப்பற்றி எப்படியறிந்தீர்?

சாட்சி: சம்பவம் நடந்தபோது கண்டசிலர் சொன்னர்கள்.

வழக்கறிஞர்: ஆஸ்பத்திரிக்கு சென்றபோது கதிரவேலு எங்கிருந்தார்?

சாட்சி: 'ஜீப்' வண்டியில் இருந்தார்.

வழக்கறிஞர்: டாக்டர் நாகநாதன் கதிரவேலுவுடன் கதைத்தாரா?

சாட்சி: ஆம் ஆனல் எனக்கு கேட்கவில்லை

வழக்கறிஞர்: கதிரவேலுவை உமக்கு நல்லாய் தெரியும்.

சாட்சி: ஆம்

வழக்கறிஞர்: அதன் பின் பொலிஸ் நிலையத்திற்கு வந்தீர்?

சாட்சி: ஆம்.

வழககறிஞர்: டாக்டருடன் நீரும் அதே வாசலில் சென்றீர்?

சாட்சி: ஆம்.

வழக்கறிஞர்: நாகநாதன் போய் எப்படி இருந்தார்?

சாட்சி: வாசலைப் பார்த்துக் கொண்டு.

வழக்கறிஞர்: முதலாவது எதிரி எப்படியிருந்தார்?

சாட்சி: நாகநாதனுக்கு எதிராக வாசலுக்கு முதுகுப்புறத்தைக் காட்டியபடி.

வழக்கறிஞர்: நாகநாதன் என்ன கதைத்தார்?

சாட்சி: கதிரவேலுவைப் பிணை எடுப்பதுபற்றி.

வழக்கறிஞர்: நாகநாதன் கோபமாகக் கதைத்தாரா?

சாட்சி: இல்லை சாதாரணமாகக் கதைத்தார்.

வழக்கறிஞர் அதன் பின் என்ன நடந்தது?

சாட்சி:நாகநாதன் பேனையை எடுத்து எழுத ஆரம்பித்தார். அவர்களின் சம்பாஷணையின் போது 'பார்லிமெண்ட்' என்ற வார்த்தை கேட்டது. எழுதிக் கொண்டிருந்த முதலாம் எதிரி பேனையை மூடிவிட்டு எழுந்தார்

வழக்கறிஞா: இரண்டாம் எதிரி?

சாட்சி: அவரும் எழுந்தார். முதலாம் எதிரி வடக்குப்பக்கத்தால் வந்து நாகநாதனைப் பின்னுக்குப் பிடித்துத் தள்ளினர். 2-வது எதிரியும் பின்னல் வந்து பக்கத்தே நின்றார்.

வழக்கறிஞர்: அதன்பின்?

சாட்சி: முதலாவது எதிரி தனது இடதுகையால் நாகநாதனின் தலையில் அடித்தார். அதைத் தொடர்ந்து 2-வது எதிரி தனது வலது கையால் அதேஇடத்தில் அடித்ததும் நாகநாதன் கீழே விழுந்தார்.

வழக்கறிஞர்: எதிரிகளும் விழுந்தார்களா?

சாட்சி: இல்லை. காக்கியுடையணிந்த ஒருகை நாகநாதனைத் தூக்கியது.

வழக்கறிஞர்: நாகநாதன் யாருக்காவது அடித்தாரா!

சாட்சி: இல்லை.

வழக்கறிஞர்: இவற்றையெல்லாம் நீர் மேசைக்கு அருகே நின்று பார்த்தீர்?

சாட்சி: ஆம்.

வழககறி: சார்ஜன் தருமலிங்கம் ஆசனத்தைத் தரும்படி நாகநாதனைக் கேட்டார்?

சாட்சி: இல்லை.

வழக்கறிஞர்: இரண்டாவது எதிரி எங்கே இருந்தார்?

சாட்சி: முதலாவது எதிரியின் வலது பக்கத்தில் இருந்தார்.

அடுத்ததாக வழக்கறிஞர் திரு. கணேசலிங்கம பத்மநாதனைக் குறுக்கு விசாரணை செய்தார்.

கணேச: ஆங்கிலம் உமக்குத் தெரியும்?

சாட்சி: விளங்கிக் கொள்ள மாட்டேன்.

கணேச: பொலிஸ் நிலையத்தில் எல்லோரும் காக்கியுடையிலிருந்தார்களா?

சாட்சி: ஆம்.

கணேச: எம். பி. அமிர்தலிங்கம் எப்போதுவந்தார்?

சாட்சி: இந்த சம்பவத்திற்குப்பின்.

கணேச: நேரத்தைக்கூறும்.

சாட்சி: எவ்வளவு நேரத்தால் என்பது எனக்குத் தெரியாது.

கணேச: சாவகச்சேரி எம். பி. நவரத்தினமும் வந்தாரா?

சாட்சி: ஆம்.

கணேச: பொலிஸ் வாக்குமூலத்தை வாசித்துக் காட்டி விளங்கியபின் நீர் கையெழுத்திட்டீர்.

சாட்சி: ஆம்.

கணேச: இரண்டாவது எதிரியும் நாகநாதனின் தலையில் அடித்ததாக பொலிஸ் வாக்குமூலத்தில் சொன்னீர்?

சாட்சி: ஆம்.

கணேச: பொலிஸ் வாக்குமூலத்தில் நீர் அப்படிச் சொல்லவில்லை

அடுத்ததாக முதலாம் எதிரியான சப்-இன்ஸ்பெக்டர் பெரேரா திரு. அமீரிஜனல் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார். விசாரணையின்போது திரு. பெரேரா தெரிவித்ததாவது:

டாக்டர் நாகநாதன் என்னுடன் மனஸ்தாபமாக இருந்தார். நான் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்தின் மகன் உட்பட சில தமிழரசுக் கட்சி எம். பி. க்களைக் கைது செய்ததைத் தொடர்ந்தே அவர் என்னுடன் மனஸ்தாபம் கொண்டிருந்தார். இதன் காரணமாக அவர் எனக்கெதிராகப் பொய்ச்சாட்சியம் கூறியுள்ளார்.

5-6-62-ல் நான் கடமையில் இருந்தபோது மாலை 5-15 க்கு கல்வியங்காட்டிலிருந்து டெலிபோன் செய்தி வந்தது. இதைத் தொடர்ந்து நான் அங்கு சென்றேன். அங்கு கதிரவேலு என்பவரை நான் கைது செய்தேன். அவர் குடிவெறியில் இருந்ததால் மாவட்ட வைத்திய அதிகாரியிடம் பரிசோதனைக்காக அவரை எடுத்துச் சென்ருேம்.

மாலை சுமார் 6-45 க்கு டாக்டர் நாகநாதன் பொலிஸ் நிலையத்துக்கு வந்து கதிரவேலுவைப் பிணையில் விடுமாறு கேட்டார். கதிரவேலு குடிவெறியிலிருக்கிருரா இல்லையா என்பதுபற்றி வைத்திய அதிகாரி பரிசோதனை செய்தபின்னர்தான் அவரைப் பிணையில் செல்ல அனுமதிக்கலாமென நான் கூறினேன். அதற்கு டாக்டர் நாகநாதன் பொலிஸ் உத்தியோகத்தர்கள் தான் குடிவெறியில் இருக்கிருர்களெனக் கூறினர்.

இதன்பின்னர் டாக்டர் நாகநாதன் அன்று பொறுப்பாயிருந்த சார்ஜண்ட் தருமலிங்கத்திடம் அவர் அமர்ந்திருந்த ஆசனத்திலிருந்து எழுந்திருக்குமாறு கூறினர். சார்ஜண்ட் எழுந்திருக்காததைத் தொடர்ந்து டாகடர் நாகநாதன் அவரை அவரது ஆசனத்திலிருந்து இழுதது விழுத்திவிட்டுத்தான் அமர்ந்துகொண்டார். சார்ஜண்ட் தர்மலிங்கம் தமது ஆசனத்தைத் தருமாறு ஆங்கிலத்திலும் தமிழிலும் கோரினர். ஆனல் டாக்டர் நாகநாதன் ஆசனத்தைக் கொடுக்க மறுத்து, ஆசனத்தை எடுக்க முடியுமா எனச் சவால் விடுத்தார். இந்த சமயத்தில் சப்-இன்ஸ்பெக்டர் பெரேரா விஷயத்தில்நான் தலையிட்டு ஆசனத்தைக் கொடுக்குமாறு டாக்டர் நாகநாதனிடம் கோரினேன். டாக்டர் நாகநாதன் அப்பொழுதும் மறுத்து தம்மை அங்கிருந்து இவரால் வெளியேற்ற முடியுமா என்றும் கேட்டார். நான் அப்பொழுது டாக்டர் நாகநாதனின் இடது கையில் பிடித்து, அவரை எழுந்திருக்குமாறு கேட்டேன் அவர் என்னைத் தாக்கும் நோக்கத்துடன் கையை விசுக்கினர். நான் தாக்கப்படாது தப்பிக்கொண்டேன். இதைத் தொடர்ந்து இருவருக்குமிடையே இழுபறியேற்பட்டது. சப்-இன்ஸ்பெக்டர் பிலப்பிட்டியாவும் சிலரும் எம்மைப் பிரித்துவிட்டார்கள்.

சார்ஜண்ட் தருமலிங்கம் குறுக்கு விசாரணை செய்யப்பட்டபோது தெரிவித்ததாவது:-

(8-ம்பக்கம் பார்க்க)

## ஜயாறன்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

தங்களுக்குள் எவ்வளவு வேற்றுமை இருந்தாலும, "மேன்மைகொள் கம்யூனிஸ நீதி விளங்குக உலகமெல்லாம்" என்பதில் இரண்டுக்கும் வேற்றுமை உண்டா?

# செய்தித்திரட்டு

### புதுமெருகு ஊட்டிய பெருமை

இணுவல், வியாழன்

'இலங்கை கம்யூனிசத்திற்கு புதுமெருகு ஊட்டிய பெருமை ஜீவானந்தத்தையே சாரும்' என்று திரு. சி. சண்முகலிங்கம் இணுவில் வாலிபர் சங்கக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார். காலஞ்சென்ற தமிழ்நாட்டுக் கம்யூனிஸ்ட் பிரமுகர் திரு. ப. ஜீவானந்தத்தின் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்து இருநிமிட நேரமௌனம் அனுஷ்டிக்கப்பட்டது. திரு. ஜீவானந்தத்தின் பணிகளைப் பாராட்டி பலரும் பேசினர்.

### எதிரி விடுதலை

ஊர்காவற்றுறை, வியாழன்

வீட்டுக்குத் தீ வைத்து எரித்ததாக நெடுந்தீவு நடுக்குறிச்சியைச் சேர்ந்த திரு. யோசேப் என்பவர்மீது தொடரப்பட்ட வழக்கு ஊர்காவற்றுறை நீதிபதி திரு. அரசுவாலடன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

விசாரணையின்போது 'தீ' வைத்ததைக் கண்டதற்கு சாட்சியம் இல்லாமையால் நீதிபதி எதிரியை விடுதலை செய்தார்.

### புதிய நிர்வாகிகள்

ஊர்காவற்றுறை, வியாழன்

ஊர்காவற்றுறையைச் சேர்ந்த கரம்பொன் மாதர் சங்கத்தின் பொதுக் கூட்டம் [illegible]மையில் நடைபெற்றது.

பின்வருபவர்கள் புதிய நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்:-

தலைவி: ஆசிரியை கண்ணம்மா நடராசா, கௌரவ காரியதரிசி: செல்வி ஜெயம் தம்பு, உப காரியதரிசி: செல்வி யோகாம்பிகை பொன்னுத்துரை, தனாதிகாரி: திருமதி இலங்கம்மா முத்துக்குமாரு.

### பெற்ரேர்-ஆசிரியர் சங்கம்

ஊர்காவற்றுறை, வியாழன்

கரம்பொன் சண்முகநாத மகாவித்தியாலயத்தில் பெற்ரேர்-ஆசிரியர் சங்கப் பொதுக் கூட்டம் அண்மையில் வித்தியாலய அதிபர் தலைமையில் நடைபெற்றபோது இந்த வித்தியாலயத்தின் அவசிய தேவைகளைக் கவனித்து வேண்டிய நடவடிக்கைகளைக் கவனிக்க வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது. இதற்காக பின்வருபவர்களைக் கொண்ட உபசபை நிறுவப்பட்டது.

தலைவர்: திரு. இ. மாணிக்கம், காரியதரிசி: திரு. சி. கந்தையா, இதர அங்கத்தவர்கள் திரு. க. சிதம்பரப்பிள்ளை (ஊர்காவற்றுறை பட்டினசபைத் தலைவர்), திரு. பொ. கனகரத்தினம், திரு. க. சுப்பையா.

### ஆலைச் சந்தை ஆரம்பம்

சுழிபுரம், வியாழன்

'மனித முன்னேற்றத்திற்குச் சன சமூக சங்கங்களின் சேவை மிகவும் அவசியம் அவற்றின் மூலமாக பரஸ்பர உதவியும், ஒற்றுமையும் மேலோங்க முடியும்" என்று தொல்புரம் காலை நேரச் சந்தையை ஆரம்பித்து வைத்த சுழிபுரம் கிராம சபைத் தலைவர் திரு. சு. கந்தசாமி கூறினர்.

### விசாரணை ஒத்திவைப்பு

பருத்தித்துறை, வியாழன்

புலோலி மேற்கு சடையன் ஆறுமுகம் என்பவர்மீது அதே ஊரைச் சேர்ந்த கந்தன் முருகன் என்பவருக்கு சொந்தமான ரூபா 1285 பெறுமதியான பல தங்க நகைகளைத் திருடியதாக பருத்தித்துறை பொலிசாரால் தொடரப்பட்ட வழக்கு பருத்தித்துறை நீதிபதி திரு. ஏ. வைத்திலிங்கம் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது எதிரி தான் சுற்றவாளியெனக் கூறியதைத் தொடர்ந்து நீதிபதி மேல்விசாரணையை மார்ச் மாதம் 12-ம் திகதிக்கு ஒத்திப் போட்டார்.

### பஜனை விழா

பண்ணாகம், வெள்ளி

பண்ணாகம் விசுவாத்தனை முருகமூர்த்தி கோவில் பஜனைச் சபையின் பதினேராவது ஆண்டு நிறைவு விழா இன்று பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவிருக்கிறது அப்போது ஆசிரியர் திரு. சீ. வினசித்தம்பி 'சண்ணப்ப நாயனர்' என்னும் பொருள் பற்றி சங்கீத கதாப்பிரசங்கம் செய்வார்.

### எரிகாயத்தால் சிறுமி மரணம்

பருத்தித்துறை, வியாழன்

நெல்லியடியில் 13 வயதுடைய கமலாம்பிகை என்னும் சிறுமி எரிகாயங்களால் கடந்த இரவு மரணமடைந்தார் என தெரியவருகிறது.

பால் காய்ச்சச் சென்ற இச்சிறுமி அடுப்பை எரிக்க மண்ணெண்ணெயை ஊற்றியபோது விரைவாக பற்றிய நெருப்பு சிறுமியின் ஆடையில் பற்றி உடம்பில் பாரிய காயங்களை ஏற்படுத்திவிட்டதாம்.

உடனடியாக புலோலி அரசினர் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்ட அச்சிறுமி அங்கு அனுமதிக்கப்பட்ட சிறிது நேரத்தில் மரணம் அடைந்து விட்டதாக கூறப்படுகிறது.

## அநுராதபுரத்துக்கு ரயில் வசதி
### 3, 4 திகதிகளில் கொண்டாட்டம்

கொழும்பு, வியாழன்

காலஞ் சென்ற பிரதமர் திரு எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா 1959-ல் அத்திவாரக்கல் வைத்த அநுராதபுரி புதிய ரயில் நிலையம் பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவினுல் பெப்ரவரி 3-ல் திறந்துவைக்கப்படும். ஒன்றரைக் கோடி ரூபா செலவில் கட்டி முடிக்கப் பெற்றிருக்கும் இப்புதிய ரயில் நிலையம் இங்கு ரயில் மார்க்கமாகப் பிரயாணம் செய்வோருக்கும் யாத்திரிகர்களுக்கும் எல்லா சௌகரியங்களையும் அளிக்கும் நவீன அமைப்புடன் திகழ்கிறது வருஷந்தோறும் ஆயிரக்கணக்கானோர் இங்கு யாத்திரை செல்வது நீண்டகால வழக்கமாக இருந்து வருகிறது.

ரயில் நிலையத்தின் புதிய கட்டட அமைப்பில் பிரயாணிகள் காத்திருப்பதற்கு 5 விசாலமான பெரிய மண்டபங்கள் உள்ளன. குழந்தைகளும் குடும்பமாக வருவோருக்கென்று தனி அறைகளும் தனித்தனியாக வருவோருக்கு தனி அறைகளும் தங்கி ஓய்வு பெறுவதற்கான ஆசன தளபாட வசதிகளுடன் அமைக்கப் பெற்றிருக்கின்றன.

திறப்புவிழா நடைபெறும் தினத்தன்றும் அதற்கடுத்த தினமும் இங்கு விசேஷ ரயில்கள் விடுவதற்கு ரயில்வேப் பகுதியார் ஏற்பாடு செய்திருக்கிருர்கள். பெப்ரவரி 4-ந் திகதி இலங்கையின் சுதந்திரதினம் இவ்வாண்டு அநுராதபுரத்தில் விமரிசையாகக் கொண்டாடப் படவிருப்பது தெரிந்ததே.

இரணைதீவு கொலைவழக்கு

## விசாரணை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், வியாழன்

இரணைதீவு கொலைவழக்கு முதல் முறையாக நேற்று யாழ்ப்பாணம் மாஜிஸ்ரேட் கோர்ட்டில் நீதிபதி திரு அரசுவால்டன் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டபோது, பொலிசாரின் புலன் விசாரணை நடைபெறுவதாகவும், அதனல் கிட்டிய தவணை தரமுடியாமலிருப்பதாகவும் கூறி அடுத்த மாதம் 20-ம் தேதி வழக்கை ஒத்திவைத்தார்.

முதலாவது எதிரியின் சார்பில் திரு. நாகனும், இரண்டாவது எதிரியின் சார்பில் திரு. செல்வரத்தினமும் ஆஜரானர்கள். எதிரிகளான சின்னவி கந்தசாமியும், மயில்வாகனமும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்கள். ஏ. எஸ். மரியநாயகம் ஏ. எஸ். பி. வழக்கை நடத்துகிருர்.

## இந்து சமய வகுப்புகள்
### அரசாங்க மான்யம்

யாழ்ப்பாணம், வெள்ளி

பாடசாலைகளின் நேரசூசிக்குப் புறம்பான நேர இந்து சமய வகுப்புக்களை நடத்தி வந்தவர்களுக்கு ஊக்கம் அளித்து விருத்தியடையச் செய்வதற்காக அரசாங்கம் 20,000 ரூபாய் ஒதுக்கியுள்ளதாக இந்து சமய ஆலோசனைச் சபை காரியதரிசி திரு. நா. நவரத்தினம் அறிவிக்கிருர்.

இப்பணத்திலிருந்து உதவி பெற இப்படியான வகுப்புகளை இதுவரை நடத்திவந்த யாவரும் இலங்கையின் எப்பாகத்திலிருந்தாலும் விண்ணப்பிக்கலாம்.

இது சம்பந்தமாக அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

"பாடசாலைகளின் பிள்ளைகள் எவ்வாறு வெவ்வேறு வகுப்புகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு வகுப்புக்கும் எவ்வாறு வெவ்வேருகப் பாடம் சொல்லிக் கொடுப்பார்களோ, அதுபோன்றே மேற்கூற பட்ட இந்து சமய வகுப்புகளும் நடத்தப்பட்டவையாக இருத்தல் வேண்டும். கூட்டுப்பிரார்த்தனை முதலிய சமய வழிபாடுகளை மட்டும் நடத்தியவைகளை, மேற்கூறிய சமய வகுப்புக்களை நடத்தியவர்களென ஏற்றுக் கொள்ள, இப்பண உதவியின் நோக்கம் இடம் கொடாது."

காரைநகர் கொலைவழக்கு

## 14-ந் திகதி தீர்ப்பு

யாழ்ப்பாணம், வெள்ளி

'குற்றச்சாட்டுக்கும் சாட்சியத்திற்கும் சம்பந்தமில்லையென்றும், 2-ம் எதிரிக்கு மாருக எதுவிதமான சாட்சியமுமில்லையென்றும், டாக்டரின் பரிசோதனை குறிப்பும் கோர்ட்டில் கூறியதும் வித்தியாசமாகக் காணப்படுவதாகவும் திரு ஜி ஜி பொன்னம்பலம். இன்று யாழ்ப்பாணம் மாஜிஸ்டேட் கோர்ட்டில் நீதிபதி திரு. அரசுவால்டன் முன்னிலையில் காரைநகர் கொலை வழக்கில், தமது வாதத்தை முடித்துக் கொள்ளும் போது கூறினர். இவ்வழக்கின் தீர்ப்பு பெப்ரவரி மாதம் 14-ம் தேதி கூறப்படும்.

## சுதந்திர தின அழைப்பு

கொழும்பு, செவ்வாய்

அநுராதபுரத்தில் அடுத்த மாதம் 4-ம் திகதி நடைபெறவிருக்கும் சுதந்திரதின நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளுமாறு, உள்நாட்டமைச்சு 5000 பேருக்கு அழைப்பு அனுப்பியிருக்கிறது.

# 'சாதி அடிப்படையில் வட்டார விஸ்தரிப்பா?'

யாழ்ப்பாணம், வெள்ளி

"யாழ்ப்பாணம் மாநகரசபை வட்டார எல்லை நிர்ணயம் மனித தர்மத்திற்கு முற்றிலும் முரணுன சாதி அடிப்படையில் நடைபெற வேண்டுமென்பதை எமது நிலையம் வன்மையாகக் கண்டிக்கிறது" என்ற தீர்மானம் கந்தர்மடம் ஜன சமூக நிலையத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இச் சன சமூக நிலையம் நிறைவேற்றிய இதர தீர்மானங்கள் வருமாறு:-

வட்டார எல்லை நிர்ணய விஷயங்களில் அரசியல் தலையீடு இருத்தல் கூடாது.

கரையூர், ஸ்டேசன் வட்டாரம் ஆகியவை சாதி அடிப்படையில் பிரிக்கப்படல் வேண்டும் எனக் குரலெழுப்பிய மாநகரசபை அங்கத்தினரையும், ஏனைய பிரமுகர்களையும், அவர்களது கோரிக்கைகளை உடனடியாக வாபஸ் பெறுமாறு எமது நிலையம் அவர்களை வேண்டுகிறது.

வட்டார எல்லை நிர்ணயம் மக்கள் தொகை அடிப்படையிலேயே நடைபெற வேண்டுமென எமது நிலையம் வலியுறுத்துகிறது.

இதன் பிரதிகள் மாநகர சபைக் கமிஷனருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

# உள்ளூராட்சி மன்றங்களுக்கு அதிக நிதி உதவி

கொழும்பு, வியாழன்

ஸ்தலஸ்தாபன சேவைக் கமிஷனர் திரு. டபிள்யு. டி. வி. மகாதந்திலா, திறைசேரி தேசிய திட்ட இலாகாவைச் சேர்ந்த உத்தியோகஸ்தர்கள் ஆகியோரைக்கொண்ட கமிட்டி ஒன்று உள்ளூராட்சி மன்றங்கள் அபிவிருத்தித் திட்டங்களை அமுல் நடத்துவதற்கு வசதிசெய்யு முகமாக மேலும் வருமானத்தைப் பெறுவதற்கான வழிவகைகளை ஆராய்ந்துவருகிறது.

தற்பொழுது பெற்றுவரும் வருமானம் அபிவிருத்தித்திட்டங்களை செயல்படுத்த போதியதாகவில்லை என உள்ளூராட்சி மன்றங்கள் முறையிட்டதைத் தொடர்ந்தே இவ்வித நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வருமானம்மூலம் வரும் பணத்தில் பெரும்பகுதியான தொகை உள்ளூராட்சிமன்றங்களில் கடமையாற்றும் உத்தியோகஸ்தர்களுக்கு சம்பளப் பணமாக செலவாகின்றது என்றும் மிகுதிப்பணம் பராமரிப்பு வேலைகளைக் கவனிக்க போதாதிருப்பதால் புதிய வேலைகளொன்றும் ஆரம்பிக்க முடியாதிருப்பதாக உள்ளூராட்சிமன்றங்கள் தெரிவித்துள்ளன. உள்ளூராட்சிமன்ற எல்லைக்குள் இருக்கும் மோட்டார் வாகனங்களின் பதிவுக் கட்டணங்களால் வரும் வருமானத்தையும் தவறணைகள் மூலம் பெறப்படும் வரியையும் உள்ளூராட்சி மன்றங்களின் நிர்வாகத்தின் கீழ் இருப்பவர்களிடமிருந்து பெறப்படும் வருமான வரியையும் தம்மிடம் தருமாறு உள்ளூராட்சி மன்றங்கள் கோரியுள்ளன.

நகரசபைகளும் பட்டினசபைகளும் கிராமசபைகளும் மேலும் வருமானம்கோரி விண்ணப்பித்துள்ளன.

### ரூ 40 லட்சம் உதவி

ஸ்தலஸ்தாபன சேவைக் கமிஷனர் திரு. டபிள்யு. டி. வி. மகாதந்திலா சகல உள்ளூராட்சி மன்றங்களிடமும் வீடமைப்புத் திட்டம் சம்பந்தமாக மதிப்பீடுகளைத் தருமாறு கோரியுள்ளார்.

இவைகளுக்குத்தேவைப்படும் நிதியை ஒதுக்குவதற்காகவே திரு. மகாதந்திலா இவ்வாறு கோரியுள்ளார்.

தம்மாலும் தேசிய வீடமைப்பு கமிஷனராலும் அங்கீகரிக்கப்பட்ட வீடமைப்புத் திட்டங்களுக்கு முதலிடம் கொடுக்கப்படுமென திரு. மகாதந்திலா தெரிவித்துள்ளார்.

வீடமைப்புத்திட்டங்கள் அவசியம் செயல்படவேண்டிய உள்ளூராட்சி மன்றங்களுக்கும் தொழிலாளவர்க்கத்தினருக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க உத்தேசித்துள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கும் முதலில் நிதி உதவி வழங்க ஸ்தலஸ்தாபன சேவைக் கமிஷனர் தீர்மானித்துள்ளார்.

ஒவ்வொரு வருடமும் 520 உள்ளூராட்சி மன்றங்களில் 170 தெரிவுசெய்யப்பட்டு நிதிஉதவி வழங்கப்படும்.

இந்த வருடத்துக்கு ரூ. 40 லட்சம் இவ்வித வீடமைப்புத் திட்டத்துக்கு நிதிஒதுக்க கமிஷனர் முடிவுசெய்துள்ளார்.

## "குடி இயல் உணர்ச்சியும் பொறுப்பும் பொது மக்களுக்கு வரவேண்டும்"

—அமைச்சர்

மின்னேரியா, வியாழன்

"அரசாங்க அதிகாரிகள்மட்டுமல்ல, பொது மக்களும் பணத்தைச் சேமிப்பதற்கு உதவி செய்யவேண்டும்; பணம் வீணே செலவழிந்து போவதைத் தடைசெய்யாவிடில் நாட்டின் நிதிநிலைமை மேலும் மோசமடைந்து விடும். ஒரு விவசாயிக்கு அரசாங்கம் பன்னிராயிரம் ரூபா வீதம் செலவழித்துள்ளது. இதற்குப் பதிலாக பெருந்தொகையான நெல்லை விவசாயிகள் உற்பத்தி செய்ய வேண்டும். அப்போதுதான் நாட்டின் நிதி நெருக்கடி தீர வழியுண்டு."

இவ்வாறு மத்திய மருத்துச்சாலை ஒன்றை இங்கு திறந்து வைத்துப் பேசிய காணி, விவசாய, நீர்ப்பாசன மந்திரி திரு. சி. பி. டி' சில்வா குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது:-

சனத்தொகை நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டேவருகிறது. ஒரு சதுர மைலுக்கு 160 பேர்தான் இருக்கவேண்டும். ஆனல் இந்தியாவில் மைலுக்கு 300 பேர் வீதம் இருக்கின்றனர். ஆனல் இலங்கையிலே சதுர மைலுக்கு 400 பேர் இருக்கிருர்கள். எனவே மக்களின் சகல தேவைகளையும் அரசாங்கம் கவனிக்க முடியாது. எந்த அரசாங்கத்திற்கும் எல்லாவிடத்திலும் ஆஸ்பத்திரிகளையும், பாடசாலைகளையும் அமைக்க முடியாது. முன்பு ஆசிரியர்கள் தமது வேலையை கடமையாகவே கணித்துச் சேவை செய்தார்கள்; ஆனல் இப்பொழுதோ பல ஆசிரியர்கள் சம்பளத்திற்காகவே வேலை செய்கிருர்கள்.

கொழும்பு, வியாழன்

இதுவரை கல்ஓயா அபிவிருத்திச்சபையினுல் றம், ஜின், பிராந்தி ஆகிய மூன்று குடிவகைகளிலும் ஒவ்வொருவகையிலும் 50 போத்தல்களே பரீட்சார்த்தமாகத் தயாரிக்கப்பட்டன என சபை தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது

குடிவகைகள் தயாரிப்பதற்காக சக்கரையிலிருந்து வடிக்கப்பட்ட 53,000 கலன் ஸ்பிறிட்கலால் முத்திரையிடப்பட்ட தொட்டிகளில் பாதுகாப்புடன் சேமித்து வைக்கப்பட்டுள்ளன என்றும் சபை தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

# உத்தரவாத விலைத்திட்டத்தில் அதிக நெல் கொள்வனவு

## உணவுக் கமிஷனரின் 60-61-ம் வருட அறிக்கை

கொழும்பு, புதன்

உத்தரவாத விலைத்திட்டத்தின்கீழ் அரசாங்கம் உள்நாட்டு விவசாயிகளிடமிருந்து 1961-ம் ஆண்டு, 1960-ம் ஆண்டிலும் பார்க்க 52,965 தொன் நெல்லும் அரிசியும் அதிகமாக வாங்கியுள்ளதாக 1960—61-ம் ஆண்டிற்கான தனது நிர்வாக அறிக்கையில் உணவுக் கமிஷனர் திரு. ஆர். எல். அர்னல்டா தெரிவித்துள்ளார்.

1961-ம் ஆண்டில் உள்நாட்டு விவசாயிகளிடமிருந்து அரசாங்கம் 338,360 தொன் நெல்லும் அரிசியும் வாங்கியுளளது. இத்தொகை முன்னைய வருடத்தைவிட 52 955 தொன் அதிகமானதாகும்.

### பர்மாவிடமிருந்து அதிக அரிசி

1960—61 வரையான நிதி வருடத்தில் அரசாங்கம் மொத்தமாக வெளிநாடுகளிலிருந்து 496,560 தொன் அரிசியை இறக்குமதிசெய்துள்ளது. இவற்றில் அதிகமான தொகை பர்மாவிடமிருந்தே இறக்குமதி செய்யபபட்டிருக்கின்றது. பர்மாவிடமிருந்து 410,331 தொன் அரிசியும் தாய்லாந்திலிருந்து 61,3·9 தொன் அரிசியும் வியட்நாமிலிருந்து 16,054 தொன் அரிசியும் சீனவிடமிருந்து 8,856 தொன் அரிசியும் இறக்குமதி செய்யப்பட்டிருக்கின்றது. பிறநாடுகளிலிருந்து அரிசி இறக்குமதிசெய்வதற்கான பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்ள உணவு கமிஷனர் தலைமையில் 1962-ம் ஆண்டு செப்டம்பர்மாதம் பாங்கொக்குக்கு புறப்பட்டதாகவும் தாய்லாந்திலிருந்து ரங்கூனுக்குச் சென்றதாகவும் அங்கிருந்து பீகிங் சென்றதாகவும் கமிஷனர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். இக்கோஷ்டி பர்மாவுடன் செய்துகொண்ட பேச்சுவார்த்தையின்பேரில் 250,000 தொன் அரிசி வாங்குவதற்கு ஒப்புக்கொள்ளப்பட்டது. இதில் 200,000 தொன் பச்சை அரிசியாகவும் வாங்குவதெனவும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

### அதிக மான்யம்

உணவுப் பொருட்களுக்கு இந்த நிதி வருடத்தில் 247,524,805 ரூபாய் அரசாங்கம் மான்யம் வழங்கியுளது. இதுவரையிலேயே இந்த நிதி வருடத்திலே தான் அதிகத் தொகையான மான்யம் வழங்கப்பட்டுள்ளது. சென்ற நிதி வருடத்தில் 192,576,592 ரூபாவே அரசாங்கத்தால் உணவுப் பொருட்களுக்கான மான்யமாக வழங்கபபட்டது.

### இறக்குமதி குறைவு

1961-ம் வருடத்தில் உணவுக் கமிஷனர் இலாகாவால் இறக்குமதிசெய்யப்பட்ட பொருட்கள் 656,945,000 ரூபாய் பெறுமதியானவை இது 1960-ம் ஆண்டில் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் பெறுமதிக்கு சற்றுக்குறைவானதாகும். 1960-ம் வருடத்தில் 741,794,000 ரூபாய் பெறுமதியான பொருட்களை இலாகா இறக்குமதி செய்தது. இதில் அரிசி, சீனி, மாவு போன்ற முக்கியபொருட்கள் 363.889,091 ரூபாவிற்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக அறிக்கை குறிப்பிடுகின்றது.

### கூப்பன் அரிசி

ஒரு வயதிற்குக் குறைந்த குழந்தைகளுக்கு கூப்பன் அரிசி வழங்கப்படுவதில்லை. இவர்களைத்தவிர, வழங்கப்பட்ட கூப்பன்களுக்கு சராசரி நாள் விதம் 2,397 தொன் அரிசி விநியோகிக்கப்படவேண்டும் ஆனால் 1961-ம் ஆண்டில் 2,237 தொன் அரிசியையே மக்கள் சராசரி நாள் விதம் கூப்பனுக்கு வாங்கியிருக்கிறார்கள்.

### தானிய பண்டக சாலைகள்

யாழ்ப்பாணம் மாவட்ட தானிய பண்டகசாலை நாவற்குளியில் நிறுவப்பட்டுவருவதாயும், கட்டிட வேலைகள் தொடர்ந்து நடைபெறுவதாகவும், பதுளையில் பண்டகசாலை அமைப்பதற்குத் தெரிந்தெடுக்கப்பட்ட காணி பொருத்தமாகவில்லாததால் வேறு காணி தெரியப்பட்டு வேலைகள் ஆரம்பிக்கப்படுமென்றும், குருநாகலையில் ஒரு பண்டகசாலையை நிறுவுவதற்கு மராமத்து டைரக்டரிடம் மாதிரிகள் கோரவிருப்பதாகவும் கமிஷனர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

உணவு வர்த்தக அமைச்சரினால் நியமிக்கப்பட்ட 'வாழ்க்கைச்செலவுக் கமிட்டி' பொருட்களைப் பாதுகாத்து வைப்பதற்கு அமைக்கப்படும் கட்டிடங்கள் 275,000 சதுர அடி பரப்பளவு கொண்டுள்ளதாக இருக்கவேண்டுமெனச் சிபார்சு செய்துள்ளதாகவும் கமிஷனரின் அறிக்கை குறிப்பிடுகிறது. இச்சிபார்சை மந்திரி சபை ஏற்றுக்கொண்டுள்ளதாகவும் இந்த அளவை உடைய நாலு பண்டகசாலைகள் அமைக்கபபடவிருப்பதாகவும் அறிக்கை கூறுகிறது.

### கால் நடை

முன்னைய வருடங்களைப் போலவே இவ்வருடத்திலும் கென்ஸ் மூலம் ஆடுகள் இறக்குமதி செய்யப்பட்டிருக்கிறது. இவ்வருடத்தில் 24.164 வெள்ளாடுகளும், செம்மறியாடுகளும் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

### உத்தியோக மொழி நிர்வாகம்

உணவுக் கமிஷனர் இலாகாவில் உத்தியோக மொழிச் சட்டத்தைப் பூரணமாக அமுல் செய்யப்படுவதற்காக 61-ம் ஆண்டு மத்தியில் ஒரு குழு நியமிக்கப்பட்டதென்றும் வருட இறுதியில் இலாகா நிர்வாக வேலைகளில் 90 சத விகிதம் உத்தியோக மொழியிலேயே நடைபெறுவதாக அறிக்கை கூறுகிறது. கணக்கியல், கொள்வனவு இறக்குமதிப் பகுதிகளிலும் உத்தியோக மொழியை செயல்முறைக்கு கொண்டுவருவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அறிக்கை தெரிவிக்கிறது.

---

## தொழிலாளர் கழகம்

### தலவாக்கொல்லையில் கிளை அமைக்கும்

திருக்கோணமலை, புதன்

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கீழியங்கும் இலங்கைத் தொழிலாளர் கழகம் தனது அடுத்த பிரசாரக் கூட்டத்தை அடுத்த மாதம் 10-ந் தேதி தலவாக்கொல்லையில் நடத்த இருக்கிறது. தலவாக்கொல்லை மாவட்டத்தில் கழகத்திற்கு உறுப்பினர்களைச் சேர்க்கும் பணியில் கழகப் பொதுச்செயலாளர் திரு. பி. எம். கிருஷ்ணசாமி தலைமையில் ஒரு குழு ஈடுபட்டுள்ளது. தமிழரசுக் கட்சியின் தலைவர் திரு. எஸ்.ஜே.வி. செல்வநாயகம் உட்பட அநேக கட்சி எம். பி.க்கள் இப்பிரசாரக் கூட்டத்தில் பங்குபற்றுவார்களெனத் தெரியவருகிறது.

## வானொலி நிகழ்ச்சிகள்

வெள்ளி 1-2-63

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 பாமாலை, 6-55 இஸ்லாமியசிந்தனை, 7-15 கே. ரி. ஆனந்தசுவாமிஐயர்-பக்திப்பாடல்கள், 7-45 திரை இசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 நாகஸ்வரம், 6-15 பாங்கு, 6-30 கிராமசஞ்சிகை, 6-45 கோட்டு வாத்தியம்.

இரவு 7-00 ஞானாஞ்சலி, 7-30 நேயர்விருப்பம், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 விமர்சனங்கள், 9-30 ஏ. சுந்தரம்-பாட்டு, 10-15 தேர்ந்த இசை.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவ 7-15)

காலை 6-45 மங்சள இசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 அருள்வாக்கு, 7-05 வாத்திய இசை, 7-10 நிகழ்ச்சிக்குறிப்புகள், 7-35 இசைக்கோவை நாகஸ்வரம்.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 12-30 நடுத்தரப்பள்ளிகளுக்கு, 1-00 யாதர்நிகழ்ச்சி, 1-30 வாத்திய இசை, 1-50 குரலிசை, 2-10 உயர்தரப்பள்ளிகளுக்கு.

மாலை 4-45 விவிதபாரதி(கர்நாடகசங்கீதம்), 5-15 காந்தி அஞ்சலி, 6-20 கிராமநிகழ்ச்சிகள்.

இரவு 7-30 'பொங்கி எழும் பாரதம்'-சித்திரம், 7-45 மணக்கால் எஸ். ரங்கராஜன்-பாட்டு, 9-15 பலசுணி, 9-30 சென்னை அஞ்சல், 9-45 இசைமாலை, 9-55 வெற்றிப்பாதையில்-சித்திரம்.

# தேசப் பிரச்னைகளைத் தீர்க்க வழி

## கட்சிகளின் ஒன்றுபட்ட முயற்சிதான்

— எம். பி.

குண்டசாலை, புதன்

'உணவு, கல்வி சம்பந்தப்பட்ட பிரச்னைகள், இலங்கை இந்தியப் பிரச்னை போன்ற முக்கிய பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு நாட்டிலுள்ள எல்லாக் கட்சிகளினதும் கூட்டு முயற்சி அவசியம்.'

இவ்வாறு மினிப்பே எம். பி. திரு. ஆர். டபிள்யு. தென்னக்கூன் ஞாயிறு பாடசாலை பரிசளிப்பு விழாவில் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும்பேசியதாவது: தேசியப் பிரச்னைகளையிட்டு அரசியல் கட்சிகள் சண்டையிடக்கூடாது. இலங்கை இந்தியப் பிரச்னையைத் தீர்த்து வைப்பதற்கு பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் திரு. டட்லி சேனநாயக்காவின் ஒத்துழைப்பைக் கோரியிருப்பதுபற்றி நான் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன் இப்பொழுது நாட்டில் ஏற்பட்டிருக்கும் நிதி நெருக்கடிக்கு, வெளிநாடுகளுக்கு எமது பணம் அதிகம் செல்வதும், உத்தரவாத விலைத் திட்டத்திற்குச் செலவிடப்படும் தொகையும்தான் இரு முக்கிய காரணங்களாகும். இப்பகுதியில் உள்ள மக்கள் உணவு உற்பத்தியை அதிகரிப்பதற்கு கவனம் செலுத்த வேண்டும்.

## பொலிஸ் கோஷ்டி தோல்வி

யாழ்ப்பாணம், வியாழன்

பொலிஸ் உதைபந்தாட்ட 'ஏ' பிரிவுக் கோஷ்டி கல்வி இலாகா உதைபந்தாட்ட 'ஏ' பிரிவுக் கோஷ்டியிடம் 4—0 கோல்களால் தோல்வியுற்றது.

யாழ்ப்பாணம் அரசாங்க ஊழியர் விளையாட்டுச் சங்க ஆதரவில் யாழ்ப்பாணம் பொலிஸ் மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் கல்வி இலாகாக் கோஷ்டி மிகத்திறமையாக விளையாடி வெற்றி பெற்றது. பொலிஸ் கோஷ்டி கோல் எதுவும் போடவில்லை.

கல்வி இலாகா கோஷ்டி மிகத் தூரிதமாக விளையாடி 4 கோல்கள் போட்டது. இப்போட்டிக்கு திரு. இஸட். சிங்கராயர் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

மின்சார இலாகா 'பி' பிரிவுக் கோஷ்டிககும் இ.போ.ச. 'பி' பிரிவுக் கோஷ்டிக்குமிடையே இம்மாதம் 28-ம் திகதி நடைபெறவிருந்த உதைபந்தாட்டப் போட்டி ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.


நீங்கள் அறியவேண்டியதோர் இரகசியம் பொஸ்



BOSS

மண்ணெண்ணெய் அடுப்புகள்

நீடியகால சேவையையும், சிக்கன சமையலையும் அளிப்பதற்கென தயாரிக்கப்பட்டவை.

சமையல் அடுப்பு — 27U — 2 பர்னர்கள்
போர்ஸலேன் மேற்புறம், கிரேட்ஸ் மற்றும் டிரம் புகைப் போக்கிகள். 2 கால் கலன் கிளாஸ் எரிபொருள் தாங்கி, ஒரே துண்டு அடிப்புறமும் பின்புறமும், நிற்கும் மோடல் உண்டு.

சமையல் அடுப்பு — 37U— 3 பர்னர்கள்
போர்ஸலேன் மேற்புறம், கிரேட்ஸ் மற்றும் டிரம் புகை போக்கிகள். 2 கால கலன் கிளாஸ் எரிபொருள் தாங்கி ஒரே துண்டு அடிப்புறமும் பின்புறமும். நிற்கும் மோடல் உண்டு.

சமையல் அடுப்பு — 20U — 2 பர்னர்கள்
மத்தியில் எரிபொருள் தாங்கி உள்ளது. சமைப்பதற்கென விசாலமான மேற்புற இடவசதியுண்டு. போர்ஸலேன் மேற்புறம் கிரேட்ஸ் மற்றும் டிரம் புகைப் போக்கிகள், 2 கால் கலன் கிளாஸ் எரிபொருள் தாங்கி. ஒரே துண்டு அடிப்புறமும், பின்புறமும், நிற்கும் மோடல் உண்டு



பொஸ் புகை பிடிக்காது, நாற்றம் அடிக்காது, கரி படியாது, சுலபமான இயக்கம்.

விசாரணைகளுக்கு: CWE ஸி.டப்ளியூ.ஈ. 40, மக்கலம் ரோட், ஸி. டப்ளியூ. ஈ. கண்டி மருதானை மற்றும் வெளியூர் டிப்போக்கள்

CWE HW

## எதிரிகள் அடித்த...:

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

நாகநாதனை எனக்குத் தெரியும். ஆனல் தொடர்பில்லை. சம்பவம் நடந்த அன்று நான் 'றிசேவில்' இருந்தேன், முதலாம் எதிரி எனக்கு முன்னும், இரண்டாம் எதிரி அவருக்குப் பக்கத்திலும் இருந்தார். கதிரவேலுவை கைதுசெய்துவிட்டு நாகநாதன் முதலாம் எதிரியுடன் பேசினர். கதிரவேலு குடித்திருந்தபடியால் கைதுசெய்ததாக முதலாம் எதிரி சொன்னர். அவர் குடிக்கவில்லை என்று டாக்டர் மறுத்துப் பிணையில் விடும்படி கேட்டார். அங்குள்ள வாங்கில் 5 அல்லது 6 பேர் உட்காரலாம், வாங்கு மேசைக்கும், சுவருக்குமிடையில் இருந்தது. அங்கே இரு மேசைகளும் இரு வாங்குகளும் இருந்தன. பொதுமக்கள் வெளியிலுள்ள வாங்குகளில் தான் முறைப்பாடுதரக் காத்திருப்பார்கள்.

நாகநாதன் இரண்டாம் முறை அங்கு சிலருடன் வரும்போது முதலாவது எதிரி இருந்தார், நாகநாதன் அங்குள்ள கடுதாசி ஒன்றை எடுத்து முறைப்பாட்டை எழுதுவதற்கு எனது கதிரையை விடும்படி கூறி என்னை தூக்கினர் நான் எழுந்து கதிரையைக் கொடுத்துவிட்டு அருகில நின்றேன் எதிர்பாராத விதத்தில் திடீரென என்னைத் தூக்கியபடியால் நான் இடம் கொடுக்க நேர்ந்தது. கதிரையை விட்டு எழுந்து வெளியிலுள்ள வாங்கில் உட்காரும்படி கேட்டேன். இக்கதிரை பொது மக்களுக்காகப் போடப்பட்டதல்ல அவர் கதிரையை விட்டு எழும்பவில்லை. உடனே முதலாவது எதிரி அவரின் தோள்மூட்டில் பிடித்து எழும்பம்படி சொன்னர். நாகநாதன் எழுந்து முதலாம் எதிரியின் முகத்தில் அடித்தார். இரண்டாம் எதிரி தலையிடவில்லை. 5 நிமிஷம் கட்டிப்புரண்டபின் விடுபட்டார்கள், இருவரும் நிலத்தில் விழுந்தார்கள். எல்லோரும் பார்த்துக்கொண்டிருந்தார்கள் நானும் உதவிசெய்யாமல் பார்த்துக் கொண்டிருந்தேன்.'

அடுத்ததாக ஏ.எஸ்.பி. செனரத்ன குறுக்குவிசாரணை செய்யப்பட்டார்.

இந்த வழக்கின் தீர்ப்பு இன்று வெளியாகும்.

---

## பெளத்த சமயத்தின் வழி நிற்பவர்கள்

நீர்கொழும்பு, செவ்வாய்

இலங்கையில் பெளத்த சமயம் முன்னேற்றம் அடைந்து வந்த போதிலும் வினயத்தின் வழிநின்று பொதுமக்களும் பௌத்தருமாரும் நடப்பதாகத் தெரியவில்லையென்று இங்கு நடைபெற்ற கூட்டமொன்றிற்குத் தலைமைவகித்துப் பேசிய திரு. டி. ஏ. அபயசிங்கா குறிப்பிட்டார்.

கடந்த காலங்கல் மக்களின் நேர்மையையும் நியாயத்தையும் போற்றிவந்தனரென்றும் ஆனல் இப்பொழுது லஞ்சமும், ஊழலும் நாட்டில் மலிந்து காணப்படுகின்றனவென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

மக்கள் சிக்கனமாக வாழ பழகிக் கொள்ளாததாலேயே நாட்டில் நிதி நெருக்கடி ஏற்பட்டுள்ளதாகவும், உண்மையில் சமயத்தில் பற்றுடையவர்கள் இந்நாட்களில் மிகக் குறைவாகவே யிருக்கிறார்களென்றும் இக் கூட்டத்தில் பேசிய வண கிவைண்சமகா தேரோ குறிப்பிட்டார்.

அநுராதபுரத்திலுள்ள பௌத்த திரு உருவச் சிலையைப் பாதுகாக்கவும இலாகா நடவடிக்கை எடுத்து வருகிறது.

கால் விகாரைக்கு மேல் மறைப்பு வேலைகள் செய்வதற்கு ரூ. 30,000 செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளதாக இலாகாவினர் தெரிவித்துள்ளனர்.

## கறுப்புக்கொடி காட்டும் பிரேரணை

### பட்டினசபையில் நிறைவேறவில்லை

மாவிட்டபுரம், வியாழன்

காங்கேசன்துறை பட்டின சபையின் சுதந்திரதினமான பெப்ரவரி 4-ம் திகதி கறுப்புக் கொடி பறக்கவிட்டு துக்க தினம் அனுஷ்டிக்கவேண்டும் என்று மூன்று அங்கத்தவர்களால் கைச்சாத்திடப்பட்டு அனுப்பிவைக்கப்பட்ட பிரேரணையை விவாதிப்பதற்கான விசேஷ கூட்டம் நேற்றுமாலை தலைவர் திரு. மு. திடவீரசிங்கம் தலைமையில்நடைபெற்றது. அப்பிரேரணை ஒழுங்கான முறையில்பிரேரிக்கப்படவில்லை என பட்டினசபை 1-ம் வட்டார அங்கத்தவரும் உபதலைவருமான திரு. க. கிருபாமூர்த்தி தலைவருக்குச் சுட்டிக் காட்டினர். தலைவர் இதனை ஏற்றுக்கொண்டு அப்பிரேரணையை நிராகரித்தார்.

பட்டின சபையில் துக்க தினம் அனுஷ்டிக்கப்பட வேண்டுமென்று கோரும் பிரேரணை மீண்டும் சபையில் கொண்டுவரப்படுமென அறிய வருகிறது.

---

## ஜனநாயகம்:..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களை எடுத்துக்கூறியிருப்பதாயும் தெரிவித்திருக்கிறர். தமிழரசுக்கட்சியினர் பொதுமக்களின் குறைகளைத் தீர்ப்பதில் சிரத்தை காட்டுவதில்லை என இவர்கள் தம்மிடம் குறையிரந்ததாகவும் அமைச்சர் மேலும் கூறியிருக்கிறர்.

ஒரே ஒரு தினம் யாழ்ப்பாணத்தில் பொதுமக்களின் பலத்த எதிர்ப்புக்களுக்கு மத்தியில் ஒடுங்கி நின்று யாழ்ப்பாணப் பொதுசன அபிப்பிராயத்தை இவ்வாறு தெரிந்துகொள்ள முடிந்த அமைச்சரின் சாமர்த்தியத்தை நாம் பாராட்டத் துணியவில்லை. அவரது பயமுறுத்தல் எச்சரிக்கைக்குப் பணிந்துவிடப் போவதுமில்லை. உங்கள் அரசாங்கத்திடமிருந்து எந்தவிதமான சலுகைகளையும் சகாயங்களையும் நாம் எதிர்பார்த்திருந்ததில்லை. இப்பொழுதுமில்லை இனிமேலுமில்லை.

"சனநாயகத்தை வளர்க்கின்றோம். அதன் அடிப்படையில் நின்று சோஷலிஸ சமுதாயத்தை நிறுவும் வகையில் ஆட்சி நடத்துகின்றோம்" என்பதாக நீங்கள் அடிக்கடி கூறி வருவதை நான் அவதானித்து வந்திருக்கிறேன். ஜனநாயகம் சோஷலிஸம் என்ற வார்த்தைகளை நீங்கள் கூறும் போது அது எனக்கு மிகுந்த வேதனையைத் தருகிறது. இரண்டு வார்த்தைகளையும் தனித்தனியாகவோ அல்லது ஒன்றுகச் சேர்ந்தும் கூட நீங்கள் குறிப்பிடாமல் விடுவதே மேல் என்று தோன்றுகிறது.

ஒரு நாட்டின் முக்கிய சிறுபான்மையினரான தமிழ் பேசும் இனத்தைப் பூண்டோடு அழிக்கும் விதத்தில் சட்டமியற்றும் உங்களிடம் ஜனநாயகம் எங்கே இருக்கிறது? சமதர்மம் என்ற சோஷலிஸம் தான் எங்கே இருக்கப்போகிறது?

125 வாக்குகளை மட்டும் கூடுதலாகப் பெற்று மக்கள் பிரதிநிதியாகி அதன் பின் அமைச்சராகி இன்று தாமே தேசத்தின் தளபதியாகி விட்டதைப் போல் பேசும் திரு. இலங்கரத்தின தமிழரசுக்கட்சியை நோக்கி இவர்கள் மக்கள் பிரதிநிதிகள் அல்லர்; இவர்களது கோரிக்கைகளுக்குச் செவிசாய்க்க வேண்டாமென்று கூறுவது சிரிப்புக்கிடமானது. இவர்களைப் போன்றவர்கள் தங்கள் மந்திரி சபையில் இருப்பது யாருடைய துரதிருஷ்டமோ?

---

## கற்சிலைகள் மீது கண்காணிப்பு

கொழும்பு, வியாழன்

புதைபொருள் ஆராய்ச்சியினரின் பாதுகாப்பிலுள்ள கற்சிலைகளைப் பேணிப் பாதுகாப்பதற்காக இலாகா பிரிட்டிஷ் நூதனசாலையைச் சேர்ந்த பேராசிரியர் எப். பிலெண்டர் சிரித் உடனும் இந்தியாவிலுள்ள புதைபொருள் ஆராய்ச்சி நிபுணர்களுடனும் தொடர்புகொண்டுள்ளது.

கால் விகாரை உட்படபல கற்சிலைகள் ரசாயனக் கலவைகளால் பாதுகாக்கப்பட்டு வருவதாக புதைபொருள் ஆராய்ச்சி இலாகாவினர் தெரிவித்துள்ளனர். அவுக்கனவிலுள்ள பௌத்த சிலை இவ்விதம் பாதுகாக்கப்பட்டுவருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

## இன்று

லைபீரிய பல்கலைக் கழக உயிரியல் துறைத் தலைவரும் சென்னை கிறிஸ்தவ கல்லூரி முன்னுள் பேராசிரியருமான டாக்டர் ஜே. பி. ஜோசுவா இன்று மாலை 5 மணிக்கு வடமாகாண விஞ்ஞான ஆசிரியர் சங்கத்தின் சார்பில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மண்டபத்தில் பகிரங்கச் சொற்பொழிவொன்று நிகழ்த்துவார்.

---

## கலைப்புலவர் உருவப் படத்திறப்பு விழா

யாழ்ப்பாணம், வெள்ளி

அகில இலங்கை வர்த்தக கலை மன்றத்தின் முதலாவது ஆண்டு நாளை சனிக்கிழமை யாழ்ப்பாணம் மாவட்ட நீதிபதி திரு. செ. தனபாலசிங்கம் தலைமையில் ஆனைப்பந்தியடி உயர்கலை மன்றத்தில் நடைபெறவிருக்கிறது. காலஞ்சென்ற கலைப்புலவர் நவரத்தினத்தின் உருவப்படம் திரைநீக்கம் செய்துவைக்கப்படவிருக்கிறது. பாராளுமன்ற உறுப்பினர்களும் அறிஞர்களும் உரைநிகழ்த்துவர் என்று தெரிகிறது.

---

## அரசியல் கொள்கை மீது வஞ்சம் தீர்க்கமாட்டேன்

### —ஒபயசேகரா

யக்கலை, வெள்ளி

"அரசாங்கத்திற்கு முரணான கொள்கையுடைய அரசாங்க உத்தியோகஸ்தர்களை சில எம். பிக்கள் இடமாற்றம் செய்ய முயற்சி செய்து வரலாம். ஆனல் நான் மட்டும் இவ்விதம் செய்வதற்கு முனைய மாட்டேன்."

இவ்வாறு உதவிச் சுகாதார மந்திரி திரு. ஜே. பி. ஒபயசேகரா பாடசாலை கட்டட திறப்பு விழா ஒன்றில் கலந்துகொண்டு பேசுகையில் குறிப்பிட்டார். இவ் வைபவத்தில் கல்விப் பகுதி உத்தியோகஸ்தர்கள் எவரும் கலந்துகொள்ளவில்லையென்பதையும், பொதுமக்களும் பெற்றேர் ஆசிரியர் சங்கங்களுமே கலந்து கொண்டனர் என்றும் செய்தி கொடுக்குமாறு பிரசன்னமாயிருந்த நிருபர்களை திரு. ஒபயசேகரா கேட்டுக்கொண்டார்.

திரு. ஒபயசேகரா மேலும் தெரிவித்ததாவது:-

மக்களுக்குச் செய்யும் சேவைக்காக நான் உயர்ந்த பதவியையோ சம்பள உயர்வையோ எதிர்பார்க்கவில்லை. சென்ற பல ஆண்டுகளா ஒபயசேகரா, பண்டாரநாயக்கா குடும்பங்கள் சுயநலம் எதையும் கருதாது பொது நலத்தைக் கருதி பொதுச் சேவைகள் செய்துவருகிறார்கள். அரசாங்கம் தான் சகலவற்றையும் செய்து உதவ வேண்டும் என்று மக்கள் எதிர்பார்க்கக் கூடாது. தாங்கள் தங்கள் பகுதி நலனுக்கு உழைக்கவேண்டும்.

---

## மகாத்மா காந்தி அமரவிழா

சங்கானை, வெள்ளி

'மகாத்மா காந்தியைப் பற்றி அறிவதும், அவரை நினைப்பதும் உங்கள் வாழ்வு சிறக்க உதவியளிக்கும்' இவ்வாறு சங்கானை மேற்குச் சைவப்பிரகாச வித்தியா சாலையில் 30.1.63 அன்றுநடைபெற்ற மகாத்மாகாந்தி அமர விழாவுக்குத் தலைமை வகித்தப் பேசிய பாடசாலைத் தலைமை ஆசிரியர் பண்டிதர் திரு.மா. மாணிக்கம் தமது தலைமையுரையில் குறிப்பிட்டார்.

மாணவர் பலர், மகாத்மாவின் தியாக வாழ்வைப் பற்றி உரைநிகழ்த்தினர். இதை அடுத்து, ஆசிரியர் திரு.ச. இராசரத்தினம் மகாத்மாவின் இளமைப் பருவத்து நற்பழக்கங்களை எடுத்துக் கூறினர்.


## திருமண அழைப்பிதழ்

மணமகன்: தொல்புரம் திரு. நா. ஆறுமுகம் அவர்களின் புத்திரன் திருநிறை செல்வன் **தில்லையம்பலம்** (உரிமையாளர், ஸ்ரீ தேவி ஸ்டோர்ஸ், சங்கானை.)

மணமகள்: அளவெட்டி திரு. தி. கந்தையா அவர்களின் ஏகபுத்திரி திருநிறைசெல்வி **சுகிர்தம்.**

காலம்: தைத்திங்கள் 21-ம் நாள் ஞாயிற்றுக்கிழமை, (3-2-63) காலை 7மணி—10மணி வரையுள்ள சுபநேரம்.

இடம்: அளவெட்டிகும்பளாவளைவிநாயகர் ஆலயம்

சுற்றத்தவர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புரிமை கொண்டு அழைக்கின்றோம்.

### அழைப்பாளர்கள்

திரு. ஆ. துரைராசசிங்கமும்— (உதவி மேயர் யாழ்ப்பாணம்) பாரியாரும்

திரு. சி. இலட்சுமணரும் பாரியாரும்

திரு. மு. சண்முகலிங்கமும் (A. C. M. P.) பாரியாரும்.

மணமகனின் சார்பாக.

திரு. க. சிவநேசனும் (ஆசிரியர்) பாரியாரும்

திரு. க. சீவரத்தினமும் (T. R. I.) பாரியாரும்

மணமகளின் சார்பாக.

அன்பர்கள் இதையே அழைப்பிதழாகக் கொள்ளவும்.



## விரைவில் எதிர்பாருங்கள்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) மற்றும் சில சினிமாஸ் திரைகளில்!



சிவாஜி கணேசன் - பத்மினி
மற்றும் பலர் நடிக்கும்

**புனர்ஜென்மம்**

திரைக்கதை-வசனம் ஸ்ரீதர் · டைரக்ஷன் ஆர்.எஸ்.மணி · இசை டி.சலபதிர

## இப்பொழுது நடைபெறுகிறது!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) விஜயா (அம்பாறை) விஜயா (மட்டக்களப்

எம். ஜி. ராமச்சந்திரன், பத்மினி, ராகினி
மற்றும் பலர் நடித்த

**ராணி சம்யுக்தா**

பாடல்கள்: கவிஞர் கண்ணதாசன் · டைரக்ஷன் டி. யோகானந்த்

**வெலிங்டன்** (யாழ்ப்பாணம்)
சவுக்கடி சந்திரகாந்தா

**மனோகரா** (யாழ்ப்பாணம்)
எம். என். கண்ணப்பா, மாதுரிதேவி, வி. என். ஜானகி, நம்பியார், எஸ். பாலச்சந்தர்
மற்றும் பலர் நடித்த

**தேவகி**


இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1963-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 1-ந்திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.